பக்கங்கள் – 15
விலை – ரூபா 50

Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 40
கதிர் : 111

திங்கட்கிழமை
17 மார்ச் 2025

பங்குனி 03 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2056

## திருட்டுகள் தொடர்பில் இருவர் கைது

கிளிநொச்சி, மார்ச் 17
பல்வேறு திருட்டுச் சம்பவங்களுடன் தொடர்புடைய குற்றச்சாட்டில் கிளிநொச்சிப் பொலிஸாரால் இருவர் கைதுசெய்யப்பட் 15

## அமெரிக்க வரிகள் தொடர்பாக பேசவிரைகிறது இலங்கைக்குழு



கொழும்பு, மார்ச் 17
எதிர்வரும் ஏப்ரல் மாதம் 2ஆம் திகதி நடைமுறைக்கு வரவுள்ள அமெரிக்க வரிகள் தொடர்பாக அமெரிக்க வர்த்தக அலுவலகத்துடன் கலந்துரையாடுவதற்கு இலங்கைத் தூதுக்குழு அடுத்த மாதம் அமெரிக்கா செல்ல 15

# பட்டலந்த அறிக்கையில் நான் குற்றவாளி இல்லை!

### குற்றச்சாட்டுகளை நிராகரிக்கின்றார் ரணில்
### அரசியல் சேறு பூசும் நடவடிக்கை என விமர்சனம்



கொழும்பு, மார்ச் 17
பட்டலந்த வீட்டுத்தொகுதியில் பொலிஸ் அதிகாரிகளுக்கு இரண்டு வீடுகளை வழங்கியமை தொடர்பில் நான், அதற்கு மறைமுகப் பொறுப்பாளி என்றே பட்டலந்த ஆணைக்குழு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது எனத் தெரிவித்துள்ள முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, அந்த அறிக்கையை முழுமையாக நிராகரிக்கின்றேன் என்றும் தெரிவித்துள்ளார். 14

## 'பட்டலந்த' விவகாரத்தில் தாமதித்துவிட்டார் ரணில்

### அறிக்கையின்படி சட்ட நடவடிக்கை அமைச்சர் நளிந்த திட்டவட்டம்

கொழும்பு, மார்ச் 17
முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, பட்டலந்த ஆணைக்குழு அறிக்கை தொடர்பாகப் பேச முயன்றாலும் மிகவும் காலதாமதமாகி விட்டது. அந்த அறிக்கையின்படி அரசாங்கம் சட்ட நடவடிக்கை எடுக்கும் என்று அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார். 11

### ஆபிரிக்க நாட்டால் திரும்பிய

## யாழ். இளைஞருக்கு மலேரியாத் தொற்று!

யாழ்ப்பாணம், மார்ச் 17
மலேரியாத் தொற்றுக்குள்ளான 23 வயதுடைய இளைஞர் ஒருவர் சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். எனவே யாழில் மீண்டும் மலேரியா நோய் பரவும் அபாயம் ஏற்பட்டுள்ளது.
குறித்த இளைஞர் ஐரோப்பா செல்வதற்காக முகவர்களால் கடந்த டிசெம்பர் மாதம் அழைத்துச் செல்லப்பட்டு சியாராலியோன் என்ற மத்திய ஆபிரிக்க நாட்டில் கைவிடப்பட் 15

## க.பொ.த. சாதாரணதர பரீட்சை ஆரம்பம்

கொழும்பு, மார்ச் 17
இன்று திங்கட்கிழமை நாடளாவிய ரீதியில் ஆரம்பமாகும் கல்விப் பொதுத்தராதர சாதாரண தரப் பரீட்சைக்கான வினாத் 11




## கடன் மறுசீரமைப்பால் சீனாவுக்கு பேரிழப்பு

### சீனத்தூதுவர் தெரிவிப்பு



கொழும்பு, மார்ச் 17
இலங்கையுடனான வெளிநாட்டுக் கடன் மறுசீரமைப்புக் காரணமாக சீனாவின் பிரதான ஏற்றுமதி, இறக்குமதிப் பங்குதாரரான சீன எக்ஸிம் வங்கிக்கு 7 பில்லியன் அமெரிக்க டொலர் நட்டம் ஏற்பட் 14

### எரிபொருளை விநியோகிக்கும்

## நிலத்தடிக் குழாயில் கசிவு 100 மில்லியன் ரூபா நட்டம்

கொழும்பு, மார்ச் 17
கொழும்புத்துறைமுகத்தின் தெற்கு இறங்குதுறையில் இருந்து கொலன்னாவை களஞ்சியசாலைக்கு எரிபொருளை விநியோகிக்கும் நிலத்தடிக் குழாயில் ஏற்பட்ட கசிவால் 100 மில்லியன் ரூபா நட்டம் ஏற்பட்டுள்ளது என்று ஐக்கிய ஒன்றிணைந்த தொழிற்சங்க 15

## இலங்கை, இந்தியா, சீனா இணைந்த கூட்டுத்திட்டம்

### தனது கனவு என்கிறார் கீ சென்ஹொங்

கொழும்பு, மார்ச் 17
தெற்காசியாவில் இலங்கை, இந்தியா, சீனா ஆகியன ஒன்றிணைந்து 'கூட்டுச் செயற்றிட்டம்' ஒன்றை முன்னெடுக்கவேண்டும் என்பது எனது கனவு என்று தெரிவித்துள்ளார் இலங்கைக்கான சீனத்தூதுவர் கீ சென்ஹொங்.
கொழும்பில் உள்ள சீனத்தூதரகத்தில் தூதுவர் கீ சென்ஹொங்கிற்கும், ஊடகப் பிரதிநிதி 11




## பணமோசடியைக் கண்டறிய வெளிநாட்டு ஆலோசகர்!

கொழும்பு, மார்ச் 17
பணமோசடி மற்றும் பயங்கரவாத நிதியுதவி ஆகிய பொருளாதாரக் குற்றங்களுக்கு எதிரான ஆய்வுகளுக்காக இலங்கை, வெளிநாட்டு ஆலோசகர் ஒருவரைப் பணியமர்த்தியுள்ளது.
சட்டத்தரணியும் பணமோசடி தொடர்பான ஆசிய பசுபிக் குழுவின் 14

விரிவுகள் பக். :- 14

## தேசபந்து தவிர ஏனையோரை கைதுசெய்யவேண்டாம்

### சட்டமா அதிபர் அறிவுறுத்து

### உள்ளூராட்சித் தேர்தலுக்காக

## யாழ். மாவட்டத்தில் 123 கட்டுப்பணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கொவிசெத

| | |
|---|---|
| திகதி | 16.03.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 4019 |
| ஆங்கில எழுத்து | G |
| வெற்றி இலக்கங்கள் | 08 49 72 79 |
| விசேட எழுத்து | G |

## ஹந்தஹன ராசி சுப பலன்

| | |
|---|---|
| திகதி | 16.03.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 1086 |
| வெற்றி இலக்கினம் | மீனம் |
| வெற்றி இலக்கங்கள் | 05 12 31 52 |

## NLB ஜய

| | |
|---|---|
| திகதி | 16.03.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 045 |
| ஆங்கில எழுத்து | E |
| வெற்றி இலக்கங்கள் | 6 0 3 0 |

## மெகா பவர்

| | |
|---|---|
| திகதி | 16.03.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 2125 |
| ஆங்கில எழுத்து | G |
| சுப்பர் இலக்கம் | 03 |
| வெற்றி இலக்கங்கள் | 12 34 44 51 |

## மஹஜன சம்பத

| | |
|---|---|
| திகதி | 16.03.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 5777 |
| ஆங்கில எழுத்து | N |
| வெற்றி இலக்கங்கள் | 4 9 5 6 0 6 |

## தன நிதானய

| | |
|---|---|
| திகதி | 16.03.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 1807 |
| ஆங்கில எழுத்து | E |
| வெற்றி இலக்கங்கள் | 03 15 54 58 |
| விசேட எழுத்து | E |

## அத சம்பத

| | |
|---|---|
| திகதி | 16.03.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 0352 |
| ஆங்கில எழுத்து | N |
| வெற்றி இலக்கங்கள் | 5 6 0 6 |

# கர்ப்பிணி உயிரிழப்பு

தீக்காயங்களுடன் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருந்த கர்ப்பிணிப் பெண் ஒருவர் உயிரிழந்துள்ளார்.


யாழ்ப்பாணம், வசாவிளானைச் சேர்ந்த 26 வயதான குடும்பப் பெண்ணே உயிரிழந்தவராவார். இரு பிள்ளைகளின் தாயான இவர் 6 மாதக் கர்ப்பிணியாவார்.

கடந்த மாதம் 20 ஆம் திகதி வீட்டில் ஏற்பட்ட முரண்பாடு காரணமாகத் தனக்குத் தானே இவர் தீ மூட்டினார் என்று இறப்பு விசாரணையில் தெரிவிக்கப்படுகின்றது. தீக்காயங்களுடன் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருந்த இவர் 14 ஆம் திகதி உயிரிழந்துள்ளார்.

இறப்பு விசாரணைகளை வலிகாமம் கிழக்கு திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் மேற்கொண்டதுடன், உடற்கூற்றுப் பரிசோதனைக்கு உத்தரவிடப்பட்டுள்ளது. (எ-26)

# மரண அறிவித்தல்

தோற்றம்
10 . 02 . 1965



மறைவு
15 . 03 . 2025

## மகேசன் மாதவன்

(பொறியியலாளர்)

உரும்பிராயைப் பிறப்பிடமாகவும் யாழ். வண்ணை பெருமாள் கோவிலடியை வசிப்பிடமாகவும் கொண்ட மகேசன் மாதவன் நேற்றுமுன்தினம் (15.03.2025) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற மகேசன் - விஜயதேவி (கனடா) தம்பதியினரின் அன்பு மகனும், காலஞ்சென்ற தவச்செல்வம் (வேலணை) - புஸ்பகாந்தி தம்பதியினரின் அன்பு மருமகனும், விஜிதாவின் அன்புக் கணவரும், றோகிற், சஞ்சய், றாகவ் ஆகியோரின் அன்புத் தந்தையும், Dr.ஜானகி (அமெரிக்கா), பகீரதன் (BEEFORT International School), குமுதினி (கனடா), மைதிலி (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரனும், Dr.சத்தியசீலன் (அமெரிக்கா), றவிகலா, ஸ்ரீரங்கநாதன் (கனடா), ஜெயநேசன் (கனடா), வினோதா (உப அதிபர் - யாழ். இந்து ஆரம்ப பாடசாலை), சிற்பரன் (Architect), செந்தூரன் (MSA3 - Building Construction), தயானா (சட்டத்தரணி) ஆகியோரின் அன்பு மைத்துனரும், விஜயசுந்தரம் (பிரதம ஆசிரியர் - வலம்புரி), சுகந்தி, மயூரதி, மதிதரன் (Managing Director - PETFORM Groups) ஆகியோரின் அன்புச் சகலனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (18.03.2025) செவ்வாய்க்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் உரும்பிராயிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக பிற்பகல் 1.00 மணியளவில் உரும்பிராய் வேம்பன் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

வேம்பன் ஒழுங்கை,
(ஒஸ்கா லேன்), உரும்பிராய்.

தகவல்:
குடும்பத்தினர்.
075 726 2964

(CS57762) N-1

## சுபிரி தன சம்பத

| திகதி | தினம் | வெற்றி வாரம் |
|---|---|---|
| 16.03.2025 | ஞாயிற்றுக்கிழமை | 0485 |

| ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் |
|---|---|
| Q | 8 9 1 0 8 8 |

## Super Ball

| திகதி | தினம் |
|---|---|
| 16.03.2025 | ஞாயிற்றுக்கிழமை |

| சீட்டிழுப்பு வாரம் | ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் |
|---|---|---|
| 2751 | Q | 09 37 45 48 |

## சனிதா

| திகதி | தினம் |
|---|---|
| 16.03.2025 | ஞாயிற்றுக்கிழமை |

| ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
|---|---|---|
| A | 04 08 15 68 | 4912 |

## SASIRI

| திகதி | தினம் |
|---|---|
| 16.03.2025 | ஞாயிற்றுக்கிழமை |

| வெற்றி வாரம் | வெற்றி இலக்கம் |
|---|---|
| 0644 | 24 27 49 |

## லக்ன ராசி

| திகதி | தினம் |
|---|---|
| 16.03.2025 | ஞாயிற்றுக்கிழமை |

| ரிஷபம் | வெற்றி இலக்கம் | சீட்டிழுப்பு வாரம் |
|---|---|---|
| | 06 25 39 60 | 4463 |

## KAPRUKA

| திகதி | தினம் |
|---|---|
| 16.03.2025 | ஞாயிற்றுக்கிழமை |

| ஆங்கில எழுத்து | சுப்பர் இலக்கம் | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
|---|---|---|---|
| O | 20 | 22 30 38 42 | 1927 |

## அத கோடிபதி

| திகதி | தினம் |
|---|---|
| 16.03.2025 | ஞாயிற்றுக்கிழமை |

| ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
|---|---|---|
| X | 45 51 66 75 | 2577 |

# அநுர அரசாங்கத்துக்கு ஏப். 21 வரை காலக்கெடு

*மல்கம் ஆண்டகை எச்சரிக்கை*



**கொழும்பு, மார்ச் 17**

**எதிர்வரும் ஏப்ரல் மாதம் 21 ஆம் திகதியன்றுடன் உயிர்த்த ஞாயிறு தின தாக்குதலின் 6 ஆவது ஆண்டு நிறைவு தினத்துக்கு முன்னதாக தாக்குதலில் பாதிக்கப்பட்டவர்களுக்கான நீதியைப் பெற்றுக்கொடுப்பதாகக் கூறிய வாக்குறுதிகளை நிறைவேற்றத் தவறும் பட்சத்தில் நாம் வீதியில் இறங்குவதற்குப் பின்னிற்கமாட்டோம் என்று கொழும்பு மறைமாவட்ட பேராயர் மல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகை எச்சரிக்கை விடுத்துள்ளார்.**

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கையிலுள்ள அரசியல் கலாசாரத்தை மாற்றியமைக்கும் நோக்கிலேயே தற்போதுள்ள ஆட்சியாளர்களை ஆட்சிபீடத்துக்கு ஏற்றினோம். ஆனால் அரசியல் கலாசாரத்தில் மாற்றம் நிகழ்வதாகத் தெரியவில்லை.

நாட்டில் குழப்பங்களை ஏற்படுத்தி, தேர்தல்களின்போது வாக்குகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாடுகளையே 1948 ஆம் ஆண்டிலிருந்து எமது அரசியல் தலைவர்கள் செய்து வருகின்றனர்.

இந்த முறைமையை மாற்றியமைக்கவேண்டும். இந்த அரசியல் கலாசாரத்தை மாற்றி அமைப்பதற்காகவே, நாம் இந்த அரசாங்கத்தை ஆட்சிபீடம் ஏற்றினோம்.

கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றுங்கள். விசேடமாக ஊடகச் சுதந்திரம், மானுடத்துவம், சுயாதீனமாக இருத்தல் போன்றவற்றுக்குத் தடையாக இருக்காதீர்கள்.

எமக்குக் கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றத்தவறும் பட்சத்தில் நாம் வீதியில் இறங்குவதற்குப் பின்னிற்கமாட்டோம் என்றார். (ச-இ)

# ரணில் — சஜித் இணைவே நாட்டுக்கு சுபீட்சம்

*நவீன் தெரிவிப்பு*

கொழும்பு, மார்ச் 17

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவும், ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாஸவும் இணையும் வரை இந்த நாட்டுக்கு விடிவு இல்லை. இந்த இரு கட்சிகளினது பிளவால் கட்சி ஆதரவாளர்களுக்கே அநீதி இழைக்கப்படுகின்றது என்று நவீன் திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஐக்கிய தேசியக் கட்சியும் ஐக்கிய மக்கள் சக்தியும் சகோதரக் கட்சிகளாகும். இரு கட்சிகளும் ஒரே கொள்கையையும் வேலைத்திட்டங்களையும் கொண்டவையாகும்.

கடந்த ஜனாதிபதி மற்றும் பொதுத் தேர்தல்களில் ரணில் விக்கிரமசிங்கவும் சஜித் பிரேமதாஸவும் இணைந்து களமிறங்கியிருந்தால் இன்று இருவரும் ஜனாதிபதியாகவும், பிரதமராகவும் பதவி வகித்திருப்பர்.

ரணில் - சஜித் என்றாவது ஒருநாள் பேச்சு நடத்தி இணையும்வரை இந்த நாட்டுக்கு எழுச்சி இருக்காது - என்றார். (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பட்டலந்த அறிக்கை விவாதம் ஏப். 10 இல்

**கொழும்பு, மார்ச் 17**

**பட்டலந்த ஆணைக்குழு அறிக்கை மீதான நாடாளுமன்ற விவாதம் ஏப்ரல் 10 ஆம் திகதி ஆரம்பமாகும் என்று நாடாளுமன்ற தொடர்புப் பிரிவு தெரிவித்துள்ளது.**

இந்த விவாதம் இரண்டு கட்டங்களாக நடைபெறும் என்று அதன் பதில் பணிப்பாளர் ஜெயலத் பெரேரா தெரிவித்துள்ளார். ஏப்ரல் 10ஆம் திகதி காலை 9.30 மணி முதல் இரவு 10 மணி வரை நிலையியற் கட்டளைகள் 22 இல் குறிப்பிடப்பட்டுள்ள படி, நாடாளுமன்ற அலுவல்களுக்காக ஒதுக்கப்பட்டுள்ளது. அதன்படி காலை 10.00 மணி முதல் 11.00 மணிவரை வாய்மொழிப் பதில் தேவைப்படும் கேள்விகளுக்கு ஒதுக்கப்பட்டுள்ளது என்றும், காலை 11.00 மணி முதல் 11.30 மணி வரை நிலையியற் கட்டளை 27(2) இன் கீழ் கேள்விகளுக்கு ஒதுக்கப்பட்டுள்ளது என்றும் நாடாளுமன்றத் தொடர்புப் பிரிவு கூறியுள்ளது. (ச-இ)




## பணிப்புறக்கணிப்பில் அஞ்சல் திணைக்களம்

கொழும்பு, மார்ச் 17

தபால் திணைக்களத்தில் உள்ள வெற்றிடங்களை நிரப்புதல் உள்ளிட்ட 7 விடயங்களை முன்வைத்து பணிப்புறக் கணிப்பை ஆரம்பித்துள்ளதாக தபால் மற்றும் தொலைத் தொடர்பு அதிகாரிகள் சங்கம் மற்றும் ஒன்றிணைந்த தபால் தொழிற்சங்க முன்னணி ஆகியன அறிவித்துள்ளன. நேற்று மாலை 4 மணி முதல் எதிர்வரும் 18 ஆம் திகதி வரை 48 மணிநேர அடையாள வேலைநிறுத்தப் போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளதாக ஒன்றிணைந்த தபால் தொழிற்சங்க முன்னணியின் இணைப்பாளர் சிந்தக பண்டார தெரிவித்துள்ளார்.

தபால் திணைக்களத்தில் சுமார் 7,500 ஊழியர்களின் பற்றாக்குறை காணப்படுகின்றன. இதற்குத் தீர்வைக் கோரி இந்தத் தொழிற்சங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ச-இ)

## மூன்றரை பில்லியன் ரூபா அலோசியஸ் வரி ஏய்ப்பு

கொழும்பு, மார்ச் 17

'பெர்பெசுவல் ட்ரஷரீஸ்' நிறுவன உரிமையாளர் அர்ஜுன் அலோசியஸ், சுமார் மூன்றரை பில்லியன் ரூபா அளவிலான வரி நிலுவையை இதுவரை செலுத்தவில்லை என்று தெரியவந்துள்ளது. குறித்த நிறுவனத்திடம் இருந்து அரசாங்கத்துக்குச் செலுத்தப்படவேண்டிய மூன்றரை பில்லியன் ரூபா வற் வரிநிலுவையைச் செலுத்தத் தவறிய காரணத்துக்காக அர்ஜுன் அலோசியஸுக்கு எதிராக கடந்த ரணில் ஆட்சிக்காலத்தில் வழக்குத் தொடரப்பட்டது.

அதன்பிரகாரம் வரி நிலுவையை செலுத்தத் தவறிய காரணத்துக்காக அர்ஜுன் அலோசியஸுக்கு ஆறு மாத சி றைத்தண்டனை விதிக்கப்பட்டது.

தற்போது அர்ஜுன் அலோசியஸ் சிறைத்தண்டனையை முடித்து விடுதலையாகிவிட்டார். எனினும், இதுவரை அவர் குறித்த வற் வரித் தொகை நிலுவையைச் செலுத்தவில்லை என்று தெரியவந்துள்ளது. (ச-இ)

## மாலைதீவில் செவ்வந்தி?

கொழும்பு, மார்ச் 17

கணேமுல்ல சஞ்சீவ கொலைக்கு மூளையாகச் செயற்பட்டதாகக் கருதப்படும் பிரதான சந்தேகநபரான இஷாரா செவ்வந்தி, கடல் வழியாக மாலைத்தீவுக்குத் தப்பிச் சென்றிருக்கலாம் எனச் சந்தேகம் வெளியிடப்பட்டுள்ளது.

பொலிஸார் தேடலை ஆரம்பிக்க முன்னரே சக்திவாய்ந்த பாதாள உலகக் கும்பலைச் சேர்ந்த ஒருவரால் செவ்வந்தி மாலைத்தீவுக்கு அழைத்துச் செல்லப்பட்டுள்ளார் எனத் தகவல்கள் கசிந்துள்ளன. (ச)



## பரீட்சை நிலையங்களுக்குள் கைபேசிகளுக்குத் தடை

கொழும்பு, மார்ச் 17

கையடக்கத் தொலைபேசிகள், ஸ்மார்ட் கடிகாரம் உள்ளிட்ட கையடக்கத் தொலைபேசிகளுடன் இணைக்கக்கூடிய அனைத்து உபகரணங்களைப் பரீட்சையும் நிலையத்துக்குள் கொண்டுசெல்வதற்குத் தடைவிதிக்கப்பட்டுள்ளது என பரீட்சைகள் திணைக்களம் அறிவுறுத்தியுள்ளது.

2024 ஆம் ஆண்டுக்கான கல்விப் பொதுத்தராதர சாதாரணதரப் பரீட்சை நாடாளாவிய ரீதியில் இன்று ஆரம்பமாகவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)

## கிளிநொச்சியில் வாள்வெட்டு; யூரியூப்பர் உட்பட மூவர் கைது

கிளிநொச்சி, மார்ச் 17

கிளிநொச்சி பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பெரியகுளம் கிராம அலுவலர் பிரிவின் கட்டைக்காட்டுப் பகுதியில் கடந்த 4ஆம் திகதி குடும்பமொன்றின் மீது நடத்தப்பட்ட வாள் வெட்டுத்தாக்குதலில் 3 சந்தேகநபர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர். கடந்த வாரம் ஒருவர் கைதுசெய்யப்பட்ட நிலையில் நேற்றுமுன்தினம் யூரியூப்பரான கணவன் மனைவி ஆகியோர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். அவர்களை கிளிநொச்சி நீதிமன்றில் நேற்று முற்படுத்தியபோது எதிர்வரும் 21ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்க நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. (ச-113)

**கண்ணால காணுறதும் பொய்,காதால கேக்கிறதும் பொய் , தீர விசாரிச்சு அறியிறதுதான் மெய் எண்டு சொல்லுவினம். போன போயா நாளில வல்வெட்டித்துறையில நடந்த ஒரு சம்பவத்திலயும் இப்பிடி தீர விசாரிக்காததாலயும், ஒரு விசயம் ஒழுங்காச் சொல்லுப்படாததாலையும் குழப்பமொண்டு நடந்திருக்குது.**

**பருத்தித்துறையில இருந்து பொன்னாலை வரைக்கும் போற கடற்கரை றோட் திருத்துப்படாமல் கனகாலமா இழுபட்டுக்கொண்டேவந்தது. பொன்னாலையில இருந்து வல்வெட்டித்துறைச் சந்தி வரைக்கும் அநேகமான இடங்களில காப்பெற் போடுப்பட்டாலும், சில இடங்களிலதான் அந்த வேலையைத் தொடங்கி இருக்கினம். ஆனால் வல்வெட்டித்துறைச் சந்தியில இருந்து பருத்தித்துறைமுனை வரைக்குமான றோட்டைத் திருத்திற அசுமாத்தம் ஒண்டையும் காணேலை எண்டு அங்கத்தைச் சனத்துக்குக் கடும் கோபம். அந்தக் கடற்கரை றோட்டால போய்வாறதெண்டால் வாகனங்களின்ர நட்டெல்லாம் கழண்டு கீழ விழுகிற அளவுக்கு ஒரே குண்டும் குழியும்தான். வல்வெட்டித்துறையில இருந்து பொன்னாலைக்குப் போற பக்கத்தை திருத்திக்கொண்டு, பருத்தித்துறைக்கு வாற பக்கத்தை திரும்பியும் பாக்காட்டி சனத்துக்கு கோபம் வரத்தானே செய்யும். அதோட ஒரு றோட்டிலையே இப்பிடி பாகுபாடு எண்டால் ஆத்திரம் இன்னும் கூடத்தான் செய்யும். இனியும் பொறுமையா இருந்தால் ஒண்டும் நடக்காதெண்டிட்டு அங்கத்தைச் சனங்கள் றோட்டை முழுசாத் போட்டுத்தரச் சொல்லி போராட்டமும் நடத்தினவை.**

**இதெல்லாம் நடந்தபிறகு , போன போயா தினத்தண்டு கச்சேரியில கட்டுப்பணம் கட்டப்போய் மூக்குடைபட்ட அதேவேகத்தோட கடற்றொழில் அமைச்சரும், திசைகாட்டி எம்.பி.மாரும் தங்கட வண்டிலை வல்வெட்டித்துறைப் பக்கமாத்தான் திருப்பினவை. அவையோட ஆளுநர், ஜீ.ஏ. எண்டு அதிகாரியள் பரிவாரங்களும் போனவை. வல்வெட்டித்துறைச் சந்தியில சோடிச்சு வைச்சிருந்த மேடையில அமைச்சர் ஏறி 'வீதிப் புனரமைப்பின்ர ஆரம்ப விழா'எண்டு முக்கால் மணித்தியாலமா ஏதேதோ சொல்லிக்கொண்டிருந்தார். சனத்துக்கோ கடுப்பிலும் கடுப்பு. அதை அங்க நிண்ட ஒருத்தர் நேரடியாவே அமைச்சரைப் பார்த்துக் கேட்டும் போட்டார்.**

**'ஏற்கனவே போடுப்பட்ட றோட்டுக்கு ஏன் திரும்ப ஆரம்ப விழா வைக்கிறியள்? உள்ளூராட்சி எலக்சனில வோட் எடுக்கத்தானே, ஏற்கனவே போட்டுக்கொண்டிருக்கிற றோட்டை நீங்கள் போட்டமாதிரிக் காட்டி வோட் கேக்கத்தானே இப்பிடி ஒரு விழாவை தடல்புடலா செய்யிறியள்?'எண்டு கேக்க அமைச்சருக்கு என்ன சொல்லுறதெண்டே தெரியாமல் போட்டுது. பிறகு இன்னொரு இளமையான எம்.பி. தான் அவரைத் தன்ர வாகனத்தில ஏத்தி சமாதானப்படுத்தினார். அதுக்குப் பிறகு மேடையில முழங்கலாம் எண்டு வந்தவையெல்லாம் அங்க இருந்து தப்பினால் காணுமெண்டு தலை தெறிக்க ஓடிட்டினம். ஆனால் இதில இன்னொரு பக்கமும் இருக்கு. உண்மையில சனம் அப்பிடிச் சத்தம் போட்டதிலையும் பிழை இருக்கு. அந்த றோட்டு இவ்வளவு நாளும் போடுப்படாமல் இருந்ததுக்குப் பின்னாலையும் ஒரு காரணம் இருக்கு. இப்ப போடுப்பட வெளிக்கிடுறதுக்கும் காரணம் இருக்கு. அதுகளெல்லாம் என்னெண்டு பட்சி நாளைக்குச் சொல்லும்.**

padsi@uthayan.com - பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** அனுகூலமான நாள். புதிய முயற்சிகள் சாதகமாக முடியும். திடீர் செலவுகள் ஏற்பட்டாலும், தேவையான பணம் இருப்பதால் சமாளித்துவிடுவீர்கள். வாழ்க்கைத்துணை வழியில் மகிழ்ச்சிதரும் செய்தி வந்துசேரும்.

**இடபம்:** உற்சாகமான நாளாக அமையும். எதிர் பாராத பொருள்வரவுக்கு வாய்ப்பு உண்டு. அரசாங்கக் காரியங்கள் சற்றுத் தாமதமாகத்தான் முடியும். புதிய முயற்சிகளை மேற்கொள்ளவேண்டாம். காரியம் நல்லபடி முடியும்.

**மிதுனம்:** எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. சிலருக்கு புதிய ஆடை, ஆபரணங்கள் வாங்கும் யோகம் உண்டாகும். சகோதர வகையில் செலவுகள் ஏற்படக்கூடும் என்றாலும், அதனால் மகிழ்ச்சியே ஏற்படும்.

**கடகம்:** மகிழ்ச்சியான நாள். தேவையான பணம் கையில் இருக்கும். இளைய சகோதரர் கேட்கும் உதவியைச் செய்வீர்கள். தந்தை வழியில் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். வாழ்க்கைத் துணையால் மகிழ்ச்சி உண்டாகும்.

**சிம்மம்:** மனதில் இனம்தெரியாத உற்சாகம் பெருக்கெடுக்கும். ஆனால், புதிய முயற்சி எதையும் இன்று தொடங்கவேண்டாம். திடீர் செலவுகளால் கையிருப்புக் கரைவதுடன் கடன் வாங்கவேண்டிய சூழ்நிலையும் ஏற்படும்.

**கன்னி:** காரிய அனுகூலம் உண்டாகும். தந்தை வழி உறவுகளால் பணவரவுக்கு வாய்ப்பு ஏற்படும். முக்கிய முடிவுகளை பிற்பகலுக்கு மேல் மேற்கொள்வது சாதகமாக முடியும். எதிர்பார்த்த நல்ல செய்தி வந்து சேரும்.

**துலாம்:** உற்சாகமான நாள். எதிர்பார்த்த பணம் கைக்கு வரும். உங்கள் முயற்சிகளுக்கு சகோதரர்கள் ஒத்துழைப்புத் தருவார்கள். பிள்ளைகளின் விருப்பத்தை நிறைவேற்றுவீர்கள். உற்சாகமான சூழ்நிலையே காணப்படும்.

**விருச்சிகம்:** வீண் அலைச்சலைத் தவிர்க்கவும். மற்றவர்களுடன் வீண் மனஸ்தாபம் ஏற்படக்கூடும் என்பதால், பேசும்போது கவனமாக இருக்கவும். காரியங்களில் சிறுசிறு தடைகள் ஏற்பட்டாலும் பாதிப்பு எதுவும் இருக்காது.

**தனுசு:** புதிய முயற்சி எதுவும் இன்றைக்கு வேண்டாம். வெளியூர்ப் பயணத்தைத் தவிர்க்கவும். மற்றவர்களுடன் வீண் மனஸ்தாபம் ஏற்படக்கூடும். பேசும்போது பொறுமையைக் கடைப்பிடிக்கவும். தாமதம் ஏற்படும்.

**மகரம்:** எதிர்பாராத அதிர்ஷ்ட வாய்ப்புகள் ஏற்படும். சிலருக்குப் பணியின் காரணமாக பயணம் மேற்கொள்ளநேரிடும். மாலையில் உறவினர்கள் வருகையால் வீட்டில் மகிழ்ச்சி ஏற்படும்.

**கும்பம்:** அரசாங்கக் காரியங்கள் அனுகூலமாக முடியும். தந்தை வழியில் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். சகோதரர்களுக்காகச் செலவு செய்யவேண்டி வரும். சிலருக்கு புதிய ஆடை, ஆபரணங்களின் சேர்க்கை உண்டாகும்.

**மீனம்:** எதிர்பார்த்த பணம் கைக்குவரும். பிள்ளைகள் வழியில் எதிர்பாராத செலவுகளும் ஏற்படக்கூடும். வெளியிடங்களில் சாப்பிடுவதை தவிர்ப்பது நல்லது. சங்கடங்களைச் சமாளிக்கவேண்டிவரும்.

# சனிப்பெயர்ச்சிப் பலன்கள்

# 2025 – 2027

கிரகப்பெயர்ச்சிகளில் முக்கியமான கிரகப் பெயர்ச்சியாகப் பார்க்கப்படுவது சனிப்பெயர்ச்சி. நாம் செய்யும் கர்மங்களுக்கு ஏற்ப நல்ல பலன்களையும், கெடு பலன்களையும் கொடுப்பவர் சனி பகவான். அதனால், சனிபகவானின் பெயர்ச்சி என்பது முக்கியமானதாகக் கருதப்படுகிறது.

திருக்கணித பஞ்சாங்கத்தின்படி 2025 ஆம் ஆண்டில் சனிப்பெயர்ச்சியானது 2025 மார்ச் 29 ஆம் ஆம் திகதி நடைபெறவுள்ளது.

மீன ராசிக்கு வரும் சனிபகவான் தொடர்ந்து 03.06.2027 வரை இரண்டரை வருட காலத்துக்கு இந்த ராசியில் சஞ்சாரம் செய்து அருளாசி வழங்குவார். மீன ராசியில் இருந்து தனது மூன்றாம் பார்வையால் ரிஷப ராசியையும், ஏழாம் பார்வையால் கன்னி ராசியையும், பத்தாம் பார்வையால் தனுசு ராசியையும் பார்க்கிறார்.



**அனைவரையும் அன்பினாலும் பாசத்தினாலும் வீழ்த்துபவர்களே, சமாதானத்தையும், அமைதியையும் விரும்புபவர்களே, கடினமான காரியங்களையும் திட்டமிட்டு வெற்றியாக்க முடிக்கும் சக்தி கொண்டவர்களே, நீங்கள் மிகவும் மன உறுதி உடையவர். எடுத்த வேலையை சரியாக முடிக்கும், எடுத்த முடிவில் மாறாமல் இருக்கும், யாரையும் சாராமல் தனது உழைப்பால் முன்னேறும் மேஷ ராசி வாசகர்களே இந்த சனிப் பெயர்ச்சி உங்களுக்கு எப்படி இருக்கப்போகிறது என்பதைப் பார்ப்போம்.**

**பலன்கள்:** இந்த சனிப்பெயர்ச்சியில் கடும் குழப்பத்துக்குப் பிறகு மனதில் தெளிவு பிறக்கும். திட்டமிடாமல் காரியங்களைச் செய்யும் போது அலைச்சல்கள் அதிகரிக்கும். மனதை ஒருமுகப் படுத்தி உழைக்கத்தொடங்குவீர்கள். மற்றவர்களின் மனதைத் துல்லியமாக அறிந்துகொள்வீர்கள். பிள்ளைகளை ஆன்மீகத்தில் ஈடுபடுத்துவீர்கள். அவர்களும் உங்கள் பேச்சைக்கேட்டு நடப்பார்கள். உங்களின் மனதை அழுத்திக் கொண்டிருந்த பல பிரச்சினைகள் விலகும்.

நீங்கள் பிடிவாதங்களைத் தளர்த்திக்கொண்டு அனைவரிடமும் ஒற்றுமையை வளர்த்துக் கொள்ளவேண்டும்.

உடல் ஆரோக்கியம் சிறப்படையும். அரசுத் துறைகளின் மூலம் எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும்.

**உத்தியோகஸ்தர்களுக்கு** இந்தப் பெயர்ச்சியின் மூலம் பதவி உயர்வு கிடைக்கும். மேலதிகாரிகள் உங்கள் பேச்சுக்குச் செவிசாய்ப்பார்கள்.



## மேஷம்

அலுவலகத்தில் உங்கள் மரியாதை உயரும். விரும்பிய இடமாற்றம் கிடைக்கும். அதேநேரம் எவரைப் பற்றியும் புறம் பேசாமல், சக ஊழியர்களின் நட்பைக் காப்பாற்றிக்கொள்ளுங்கள்.

**வியாபாரிகள்:** வாடிக்கையாளர்களிடம் நிதானமாகவும், கோபப்படாமலும் நடந்துகொண்டால் நல்ல இலாபங்களை அள்ளலாம். மற்றபடி கடுமையான போட்டிகளையும் சாதுர்யமாகச் சமாளிப்பீர்கள். கொடுக்கல், வாங்கல் விஷயங்கள் வெற்றிகரமாக முடிவடையும். அதேசமயம் புதிய முதலீடுகளில் கவனமாக இருக்கவும்.

**அரசியல்வாதிகள்:** தொண்டர்களின் தேவைகளை முழுமையாகப் பூர்த்தி செய்ய பிரயத்தனப்படுவீர்கள். உங்கள் முயற்சிகள் அனைத்தும் வெற்றிப் பாதையை நோக்கிச் செல்லும்.

**கலைத்துறையினருக்கு:** புதிய வாய்ப்புகள் தேடிவரும். அவற்றில் உங்கள் திறமையை வெளிப்படுத்தி ரசிகர்களின் ஏகோபித்த ஆதரவைப் பெறுவீர்கள். உங்கள் செல்வாக்கு உயரும். பணவரவு அமோகமாக இருக்கும். ஆனாலும் கடுமையாக உழைக்கவேண்டியதிருக்கும். மாணவமணிகள் கல்வியிலும், விளையாட்டிலும் வெற்றிக்கொடி நாட்டுவீர்கள். ஆனாலும் ஒருமுறைக்கு இருமுறை படிக்கவும். பெற்றோர் மற்றும் ஆசிரியர்களின் ஆதரவைப் பெறுவீர்கள்.

# கசிப்புடன் ஒருவர் கைது !



யாழ்ப்பாணம், மார்ச் 17

யாழ். மத்தியூஸ் வீதியிலுள்ள வீடொன்றில் கசிப்புடன் ஒருவர் நேற்றுமுன்தினம் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

யாழ். பொலிஸ் நிலைய குற்ற விசாரணைப் பிரிவு மற்றும் போதைத் தடுப்புப் பொலிஸாருக்குக் கிடைத்த தகவலுக்கமைய சம்பவ இடத்தை முற்றுகையிட்டு பொலிஸார் சோதனை நடவடிக்கையை முன்னெடுத்தனர். இதன்போதே 20 லீற்றர் கசிப்பு, 6 பரல் கோடா என்பவற்றுடன் ஒருவர் கைதுசெய்யப்பட்டார். (ச-22,26)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சர்வதேசப் பொறிமுறைக்கு இலங்கை அஞ்சுவது ஏன்?

## கஜேந்திரகுமார் எம்.பி.கேள்வி

கொழும்பு, மார்ச் 17

உண்மையான நல்லிணக்கத்தை நாட்டில் ஏற்படுத்தவிரும்பினால் கடந்த அரசாங்கங்கள் கடைப்பிடித்த போக்கினைக் கைவிட்டு வெளிநாட்டுப் பொறிமுறைக்கு வழிவிடவேண்டும். எதற்காக நீங்கள் வெளிநாட்டுப் பொறிமுறைக்கு அச்சங்கொள்ளவேண்டும்? இவ்வாறு நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற 2025 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத்திட்டத்தின் வெளிவிவகாரம், வெளிநாட்டு வேலைவாய்ப்புகள் மற்றும் சுற்றுலாத்துறை அபிவிருத்தி அமைச்சு மீதான விவாதத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் கேள்வியெழுப்பியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:- மஹிந்தவின் ஆட்சியில் மக்கள் விடுதலை முன்னணி இராணுவத் தீர்வைத் தீவிரமாக ஆதரித்தது. அவ்வாறான நிலையில் உண்மையில் இந்த அரசாங்கம் பொறுப்புக்கூறும் செயன்முறைக்கு ஆதரவளிக்குமா? என்ற சந்தேகம் காணப்படுகிறது.

இனமோதல்கள் தொடர்பில் வெளிவிவகாரத்துறை அமைச்சு பிரதான பங்கு வகிக்கின்றது. அதாவது கடந்தகாலங்களில் பயங்கரவாத எதிர்ப்பு உள்ளிட்ட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதுடன் பல பொய்களும் பரப்பப்பட்டுள்ளன.

இந்த அரசாங்கம் வருவதற்கு முன்னர் இந்த அமைச்சு அவ்வாறுதான் இருந்தது. தமிழ் மக்கள் உரிமைகளைக் கோரும்போது அது தொடர்பான போராட்டத்தைப் பயங்கரவாதம் என்று குறிப்பிட்டு இந்த அமைச்சின் ஊடாகவே பிரசாரங்கள் முன்னெடுக்கப்பட்டன.

தேசிய மக்கள் சக்தி தலைமையிலான அரசாங்கம் பதவியேற்றதன் பின்னர் அந்த நடவடிக்கைகளை மாற்றியுள்ளதா என்ற கேள்விகள் எழுகின்றன. இந்த நாட்டில் நல்லிணக்கம் உருவாக வேண்டுமாயின், என்ன நடந்தது என்று ஆராய வேண்டும்.

அந்த நடவடிக்கை நம்பகத்தன்மையானதாக இருப்பதற்கு உள்நாட்டு பொறிமுறை தீர்வாக அமையாது. சகலவற்றையும் உள்ளடக்கிய பொறிமுறையும், விசாரணைச் செயன்முறைகளும் முன்னெடுக்கப்படவேண்டும்.

இதுவே குறைந்தப்பட்சத் தகுதியாக இருக்கின்றது.

ஆகவே கடந்த அரசாங்கங்கள் கடைப்பிடித்த போக்கினைத் தற்போதைய அரசாங்கம் தொடரக்கூடாது - என்றார். (ச-26,125,27)

# சிறுதானியச் செய்கை மழையால் பாதிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 17

தென்மராட்சிப் பிரதேச நெல்வயல்களில் காலபோக நெற்செய்கை அறுவடையின் பின்னர் மேற்கொள்ளப்பட்ட சிறுதானியப் பயிர்கள் வெள்ளத்தில் மூழ்கி பாதிப்புக்குள்ளாகியுள்ளன என்று விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர்.

பெருமளவு வயல்களில் போதியளவு ஈரத் தன்மை காணப்பட்டதால் உழுந்து, பயறு, கௌப்பி, சணல் போன்ற சிறுதானியப் பயிர்கள் பயிரிடப்பட்டன.

கடந்த சில நாள்களாக பெய்த மழையால் அவை வெள்ளத்தில் மூழ்கி அழிவடையும் நிலையில் காணப்படுகின்றன என்றும் விவசாயிகள் தெரிவித்துள்ளனர். (ச-25,9)




# ‘சீர்மியம்’ நூல் வெளியீடு

கொடிகாமம், மார்ச் 17

பூநகரிப் பிரதேச மேற்பார்வைப் பொதுச்சுகாதாரப் பரிசோதகர் ஆ.ஜென்சன் றொனால்ட் எழுதிய ‘சீர்மியம்’ சிறுகதைத் தொகுதி நூல் வெளியீடு நிகழ்வு கொடிகாமத்திலுள்ள சாவகச்சேரிப் பிரதேச சபையின் தலைமைச் செயலக மாநாட்டு மண்டபத்தில் கடந்த வியாழக்கிழமை இடம்பெற்றது.

பூநகரி சுகாதார மருத்துவ அதிகாரி துஷ்யந்தன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் முதன்மை விருந்தினராக சமுதாய மருத்துவ நிபுணர் ஜோசப்பின் திருமகள் சிவசங்கர், சிறப்பு விருந்தினராக எழுத்தாளர் அஜந்தன் ஆகியோர் கலந்துகொண்டனர். நூலின் முதற்பிரதியை சாவகச்சேரிப் பிரதேசசபையின் செயலாளர் க.சந்திரகுமார் பெற்றுக்கொண்டார். (ச-25,9)

# கஞ்சா கலந்த மாவாவுடன் மூவர் கைது !

யாழ்ப்பாணம், மார்ச் 17

யாழ். உடுவில் பகுதியில் நேற்று முன்தினம் சனிக்கிழமை கஞ்சா கலந்த மாவாவுடன் சந்தேகநபர்கள் மூவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

குறித்த பகுதியில் விசேட அதிரடிப் படையினர் முன்னெடுத்த சுற்றிவளைப்பு நடவடிக்கையின்போதே சந்தேகநபர்கள் சிக்கினர்.

இருவரிடம் தலா 200 கிராமும் மற்றைவரிடம் 100 கிராமும் அளவுடைய கஞ்சா கலந்த மாவா கைப்பற்றப்பட்டுள்ளது. சந்தேகநபரை மேலதிக விசாரணையின் பின் மல்லாகம் நீதிமன்றத்தில் முற்படுத்துவ தற்கான நடவடிக்கைகளைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ச-22,27)

# இரணைமடுவில் ஹெரோய்னுடன் சந்தேகநபர் கைது

யாழ்ப்பாணம், மார்ச் 17



இரணைமடு 155ஆம் கட்டைப் பகுதியில் உடமையில் உயிர்க்கொல்லி ஹெரோய்ன் போதைப்பொருளை வைத்திருந்த குற்றச்சாட்டில் ஒருவர் நேற்றுமுன்தினம் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கிளிநொச்சி மாவட்ட குற்றத்தடுப்பு பொலிஸாரால் இந்தக் கைது இடம்பெற்றது. சந்தேகநபரிடமிருந்து 40 மில்லிக்கிராம் ஹெரோய்ன் போதைப்பொருள் மீட்கப்பட்டுள்ளது. சந்தேகநபரை கிளிநொச்சி நீதிமன்றில் முற்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். (ச-28)



# பொதுக்கூட்டமும் நிர்வாகத்தெரிவும்

யாழ்ப்பாணம், மார்ச் 17

வட்டுக்கோட்டைப் பிரதேச மருத்துவமனையின் நோயாளர் நலன்புரிச் சங்கத்தின் நிர்வாகத்தெரிவும் பொதுச் சபைக் கூட்டமும் நேற்றுமுன்தினம் மருத்துவமனையில் நடைபெற்றன.

இதில் மருத்துவமனையின் பொறுப்பு மருத்துவ அதிகாரி கஜானா கெங்காதரன் தலைவராகவும், அ.இன்பராசா செயலாளராகவும், பேரின்பநாதன் பொருளாளராகவும், குலசிங்கம் உப தலைவராகவும், திருமதி கலைமதி உப செயலாளராகவும் தெரிவுசெய்யப்பட்டனர். கணக்காய்வாளர்களாக பு.கஜிந்தன் மற்றும் திருமதி தாரணி ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டனர்.

அத்துடன் வட்டுக்கோட்டைப் பகுதியில் உள்ள ஒவ்வொரு கிராம சேவகர் பிரிவுகளிலும் இருந்து ஒவ்வொரு நிர்வாக சபை உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டனர். நிர்வாகத் தெரிவின் பின்னர் மருத்துவமனையின் அபிவிருத்தித் திட்டங்கள் குறித்தும் கலந்துரையாடப்பட்டன. (ச-33-27)

# பங்குனித்திங்கள் இன்று ஆரம்பம்

யாழ்ப்பாணம், மார்ச் 17

யாழ். குடாநாட்டில் உள்ள அம்மன் ஆலயங்களில் முதலாவது பங்குனித் திங்களை முன்னிட்டு இன்று காலை விசேட பூஜை வழிபாடுகள் மற்றும் பொங்கல்கள் என்பன இடம் பெறவுள்ளன.

பிரசித்திபெற்ற மட்டுவில் பன்றித்தலைச்சி அம்மன் ஆலயத்தில் இன்று காலை 5 மணிக்கு முதலாவது பங்குனித்திங்கள் பொங்கல் உற்சவ வழிபாடு ஆரம்பமாகி இரவு 9 மணிவரை இடம்பெறவுள்ளது.

ஆலயத்துக்கு வருகைதரும் பக்தர்களுக்கு குடிதண்ணீர் மற்றும் சுகாதார வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன என்று ஆலய நிர்வாகத்தினர் தெரிவித்துள்ளனர். (ச-33-17)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
உண்மை - நேர்மை - அஞ்சாமை



நாளொரு நல்வார்த்தை


துணிவில்தான் உங்களின்
மேதைத்தனம், ஆற்றல், அற்புதம் என
அனைத்தும் புதைந்து கிடக்கின்றன.
– கதே–

# ஏனிந்த வெள்ளையடிப்பு?

“இலங்கைப் படையினர் ஒருபோதும் பாலியல் வன்புணர்வில் ஈடுபடவேயில்லை' என்று நாடாளுமன்றில் சத்தியம் செய்துள்ளார் நாமல் ராஜபக்ச” போர்க் குற்றவாளிக் குடும்பமான ராஜபக்சக்களின் இப்போதைய அரசியல் வாரிசு அவர் மட்டுமே என்பதால், தன் குடும்பத்தின் மீது விழுந்துவிட்ட பழியைத் துடைக்கவே, படைத்தரப்புக்கு வெள்ளையடிக்க முனைகின்றார். இலங்கையில் படைத்தரப்பால் பாலியல் வன்புணர்வுக்குள்ளான பெண்களின் பட்டியல் மிக நீளமானது. வெளிச்சத்துக்கு வராமலே இருளில் மறைந்துபோன சம்பவங்கள் ஏராளம். தம் எதிர்காலம் கருதியும், குடும்ப கௌரவத்தைக் காக்கவும் பல பெண்கள் படையினர் மேற்கொண்ட இந்தப் பாலியல் வன்புணர்வு என்ற வக்கிர வேட்டை பற்றி வெளிப்படுத்தாமல், தமக்குள்ளேயே புதைத்துவிட்டனர். எனினும் படைத்தரப்பு பெண்ணுடலை பாலியல் இச்சையைத் தீர்ப்பதோடு தன் வெறியாட்டத்தை நிறுத்துவதில்லை. அது அவர்களின் உயிரையும் மிச்சம் விடுவதில்லை. இலங்கைப் படைத்தரப்பின் பாலியல் வெறியாட்டத்துக்கு உதாரணங்களாக கிருஷாந்தி, கோணேஸ்வரி, சாரதாம்பாள், இசைப்பிரியா என்போரைச் சொல்லமுடியும்.

யாழ்ப்பாணம், சுண்டுக்குழி மகளிர் கல்லூரியின் உயர்தர மாணவியான கிஷருாந்தி குமாரசுவாமி, செம்மணிப் பகுதியில் வைத்து படைத்தரப்பால் கூட்டு வன்புணர்வு செய்யப்பட்டு கொலைசெய்யப்பட்டார். அவரைத் தேடிச்சென்ற தாய், சகோதரன், உறவினர் என்போரையும் கொன்று புதைத்தது படைத்தரப்பு. பின்னர் இந்தக் கொலைகளை விசாரணை செய்தபோது, இதேபோன்று நூற்றுக்கணக்கானோர் செம்மணியில் கொன்று புதைக்கப்பட்ட உண்மைகள் வெளிவந்து உலகையே உறைய வைத்தன,. செம்மணியில் பாலியல் வன்புணர்வின் பின்னர் கொல்லப்பட்ட பெண்களே அதிகளவில் புதைக்கப்பட்டனர் என்பதை சந்தேகநபர்களின் சாட்சியங்கள் உறுதிப்படுத்தின. அம்பாறையைச் சேர்ந்த 35 வயதான கோணேஸ்வரி மூன்று பிள்ளைகளின் தாய். 1997 இல் அவரை அம்பாறையில் இருந்த பொலிஸார் கூட்டு வன்புணர்வு புரிந்தனர். தம் குற்றத்தை மறைக்க, கோணேஸ்வரியின் பிறப்புறுப்பில் கிரனெட்டை வெடிக்கவைத்துக் கொலையும் செய்தனர். 1999 ஆம் ஆண்டு, புங்குடுதீவுக் கடற்படையினரால், இரவுவேளையில் வீடுபுகுந்து இழுத்துச் செல்லப்பட்ட 29 வயதான சாரதாம்பாள், அடுத்தநாள் வீட்டில் இருந்து நூறுமீற்றர் தொலைவில் இருந்த வெற்றுக்காணியில், கூட்டு வன்புணர்வு செய்யப்பட்டு கொலையுண்டு கிடந்தார். இவர்களைப் போன்று இறுதிப்போரில் நிகழ்ந்த படைத்தரப்பின் பாலியல் வன்புணர்வுகளின் ஒருகுறிகாட்டிதான் இசைப்பிரியா. அவர் வெற்றுடம்பாக படைத்தரப்பால் பிடித்துவைக்கப்பட்ட வீடியோக்கள் கூட வெளியாகி, பெரும் அதிர்வை உண்டுபண்ணியிருந்தன. இப்படியாக இலங்கைப் படைத்தரப்போடு பாலியல் வன்புணர்வென்பது ஒட்டிப்பிறந்தது என்பது எல்லோருக்குமே தெரியும்.

உள்ளூரில் மட்டுமல்ல சர்வதேச ரீதியாகவும் இலங்கைப் படைத்தரப்பினர் பாலியல் குற்றங்கள் செய்வதில் சளைத்தவர்களில்லை. 2017 ஆம் ஆண்டு ஹெய்ட்டிக்கு அமைதி காக்கச் சென்ற ஐ.நா.படையில் இலங்கை இராணுவத்தினரும் இருந்தனர். அவர்களில் 130 பேர் பெண்கள் மீதும், சிறுவர்கள் மீதும் பாலியல் குற்றங்களைப் புரிந்தமை உறுதி செய்யப்பட்டு, உடனடியாக அவர்கள் நாட்டுக்கு திருப்பி அனுப்பப்பட்டிருந்தனர். இப்படியாக உலகின் முன் பாலியல் குற்றவாளிகளாக தலைகுனிந்திருக்கும் படைத்தரப்புக்கு 'வன்புணர்வு செய்யும் பழக்கமே இல்லை' என்று நற்சான்றிதழ் கொடுக்கவும் ஒரு தைரியம் வேண்டும். இறுதிப்போரில் நிகழ்ந்த அத்தனை அநியாயங்களுக்கும் பங்காளிகளான ராஜபக்ச குடும்பத்தின் அரசியல்வாரிசு, இப்படி படைத்தரப்புக்கு வெள்ளையடிப்பதன் மூலம் தங்கள் மீதான காலப்பழியையும், பாதிப்புற்றோரின் சாபத்தையும் இன்னும் அதிகமாக்குகிறார் என்பதே உண்மை.



## கனடாவில் நீதியமைச்சராக பதவியேற்றார் ஹரி



**கொழும்பு, மார்ச் 17**

**கனடா வரலாற்றில் முதல்முறையாக யாழ்ப்பாணத்தில் பிறந்தவரான ஹரி ஆனந்தசங்கரி நீதி அமைச்சராகவும் சட்ட மாஅதிபராகவும் நியமிக்கப்பட்டுள்ளார்.**

கனடாவின் புதிய பிரதமர் மார்க் கார்னியும் அவரது அமைச்சரவையும் பதவியேற்ற நிலையில் ஹறிணி ஆனந்தசங்கரி குறித்த பதவிகளை ஏற்றுள்ளார்.

இந்தநிலையில் இலங்கை வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் ஹரி ஆனந்தசங்கரிக்கு தனது வாழ்த்துக்களைத் தெரிவித்துள்ளார்.


இதனை எமது நாடு பெருமையாகக் கருதுகின்றது என்றும் அவர் குறிப்பிட்டார்.

அதேவேளை இலங்கையின் மூத்த தமிழ் அரசியல்வாதியான தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகம் வீ.ஆனந்தசங்கரியின் இளைய புதல்வரே ஹரி ஆனந்தசங்கரி ஆவார் என்பது குறிப்பிடத்தக்கது. (ச-இ)

## கிராண்ட்பாஸ் இரட்டைக்கொலை நால்வர் கைது

கொழும்பு, மார்ச் 17

கொழும்பு கிராண்ட்பாஸ் - களனிதிஸ்ஸகமப் பகுதியில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை இருவரை வெட்டிக்கொலை செய்த குற்றச்சாட் டில் நான்கு பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் எனக் கிராண்ட்பாஸ் பொலி ஸார் தெரிவித்துள்ளனர். அத்துடன் கொலைக்குப் பயன்படுத்தப்பட்ட கூர்மையான ஆயுதத்தையும் பொலிஸார் பறிமுதல் செய்துள்ளனர். கைதுசெய்யப்பட்ட சந்தேக நபர்கள் 20 முதல் 40 வயதுக்குட்பட்டவர்கள் என்றும் மேலதிக விசாரணையின் பின் அவர்களை நீதிமன்றத்தில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (ச-இ)



## துப்பாக்கிகளுடன் ஐவர் கைது

துப்பாக்கிகளுடன் ஐந்து பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். கைதுசெய்யப்பட்டவர்கள் அஹுங்கல்ல, பல்லம, மாபலகம, மஹநான்னேரிய மற்றும் அம்பாறை ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்களாவர். கைதுசெய்யப்பட்டவர்கள் 29, 73, 28,48, 33 வயதுடையவர்கள் எனத் தெரிவிக்கப்படுகின்றது. (ச-இ)

## விமானத்தில் பாலியல் துன்புறுத்தல் ஒருவா கைது

கொழும்பு, மார்ச் 17

சிங்கப்பூரில் இருந்து கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்த விமானத்தில் பணிபுரியும் இரு விமானப் பணிப்பெண்களை பாலியல் துன்புறுத்தலுக்குள்ளாக்கிய பயணி ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார். கொழும்பு, அத்துருகிரிய பகுதியைச் சேர்ந்த 38 வயதுடைய நபரே விமான நிலைய பொலிஸ் அதிகாரிகளினால் நேற்று முன்தினம் கைதுசெய்யப்பட்டுள்ளார். (ச-இ)

## சிறந்த சாரதிகளுக்கு வெகுமதிப்பொருள்கள்

கொழும்பு, மார்ச் 17

எதிர்காலத்தில் கண்ணியமான சாரதிகளுக்காக வெகுமதித் திட்டத்தை நடைமுறைப்படுத்த பொலிஸார் திட்டமிட்டுள்ளனர். பதில் பொலிஸ்மா அதிபர் பிரியந்த வீரசூரியவின் ஆலோசனைக்கமைய இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இந்த வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் இடம்பெற்ற 412 வீதி விபத்துகளில் 431 பேர் உயிரிழந்துள்ளனர். இந்தநிலையில் வீதி விபத்துகளைக் கட்டுப்படுத்தும் வகையில் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உக்ரைன் இராணுவத்தினர் பலர் உயிராபத்தில்!



- சுற்றிவளைத்தது ரஷ்யப்படை
- சரணடைந்தால் மன்னிப்பு என்கிறார் புடின்

வொஷிங்டன், மார்ச் 17

**உக்ரைனின் இராணுவத்தினர் பல்லாயிரம் பேர் உயிராபத்தில் உள்ளனர் என்பதை ஏற்றுக்கொள்வதாக அமெரிக்க அதிபர் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.**

குர்க்ஸ் பிராந்தியத்தில் உக்ரைன் படையினர் நிலைகொண்டுள்ள பகுதிகளில், நிலத்துக்குக் கீழாகச் செல்லும் பிரமாண்டமான எரிவாயுக் குழாய்களால் உள்நுழைந்த ரஷ்யப் படையினர் உக்ரைன் வீரர்களைச் சுற்றிவளைத்துள்ளனர். குறிப்பிட்ட ஓர் இடத்துக்குள் பல்லாயிரம் உக்ரைன் படைகள் முடக்கப்பட்டுள்ள நிலையில், அவர்களுக்கான விநியோகச் சங்கிலியும் தகர்க்கப்பட்டுள்ளது.

இதையடுத்தே, உக்ரைனின் பல்லாயிரம் இராணுவத்தினர் உயிராபத்தில் உள்ளனர் என்றும், அவர்களின் உயிரைக் காப்பாற்றுவதற்கு அதிபர் புடின் தலையிட வேண்டும் என்றும் ட்ரம்ப் கருத்துத் தெரிவித்துள்ளார்.

ட்ரம்ப், எந்தப் பிராந்தியத்தின் பெயரையும் குறிப்பிட்டுக் கருத்துத்தெரிவிக்கவில்லை. ஆனால், அவர் குர்க்ஸ் பிராந்தியத்தில் நிகழ்ந்துள்ள சுற்றி வளைப்பையே சுட்டிக்காட்டுகின்றார் என்பதே பொதுவான கருத்தாக உள்ளது. இதற்கிடையே, உக்ரைனின் படைகளை உயிருடன் விடுவதற்கும், அவர்களின் வாழ்வுரிமைக்கு உத்தரவாதம் வழங்குவதற்கும் தயார் என்று புடின் தெரிவித்துள்ளார். ஆனால், உக்ரைன் படைகள் ஆயுதங்களைக் கைவிட்டு விரைவில் சரணடைய வேண்டும் என்ற நிபந்தனையை புடின் விதித்துள்ளார். (ம)

## ஊழலை மறைப்பதற்கே ஹிந்தி எதிர்ப்புப் போர்!

சென்னை, மார்ச் 17

தனது ஊழல் மோசடிகளை மறைப்பதற்காகவே, அப்பாவிப் பொதுமக்களை மொழிமயக்கத்தில் வைத்திருக்க தி.மு.க. விரும்புகின்றது என்று பா.ஜ.க.வின் முக்கியஸ்தர் எச்.ராஜா விமர்சித்துள்ளார்.

ஹிந்தி மொழிக்கு எதிராகவும், மூன்றாம் மொழிக்கொள்கைக்கு எதிராகவும் தமிழகத்தில் தற்போது போராட்டங்கள் இடம்பெற்று வருகின்றன. இவ்வாறான பின்னணியிலேயே, 'இந்தப் போராட்டங்கள் அனைத்தும், பொதுமக்களை சிந்தனையற்றவர்களாக வைத்திருப்பதற்கு தி.மு.க மேற்கொண்டுள்ள திட்டம்' என்று எச்.ராஜா சுட்டிக்காட்டியுள்ளார்.

தேசிய கல்விக் கொள்கையின் ஓர் அம்சம்தான் மும்மொழிக் கொள்கை. தமிழகத்தில் நடைபெறும் ஊழல்களை மறைப்பதற்காக மும்மொழிக் கொள்கை எதிர்ப்பைத் திராவிடக் கும்பல் கையில் எடுத்துள்ளது. அதற்காக தமிழக மக்களை 1965ஆம் மற்றும் 1967ஆம் ஆண்டு கால மனநிலைக்குக் கொண்டு போவதுதான் அவர்களது திட்டம் என்றும் எச்.ராஜா கூறியுள்ளார்.

தி.மு.க.வின் இந்த சதிச்செயல்களையும், கபடத்தனத்தையும் எதிர்கொள்ளத் தயாராக இருக்கிறோம். தி.மு.க.வின் ஊழல் ஆட்சியை ஒழிக்காமல் தமிழன் தலைநிமிரமுடியாது. தமிழக மக்களால் தி.மு.க. விரட்டியடிக்கப்படும் காலம் தொலைவில் இல்லை என்று எச்.ராஜா மேலும் தெரிவித்துள்ளார். (ம)



## ஆயுத உற்பத்திகளை உடன் அதிகரியுங்கள்

### அதிபர் மக்ரோன் உத்தரவு

பாரிஸ், மார்ச் 17

பிரான்ஸின் ஆயுத உற்பத்தியை அதிகரிக்குமாறு தொடர்புடைய நிறுவனங்களின் பிரதானிகளை நேரில் அழைத்து அறிவுறுத்தல் வழங்கியுள்ளார் அதிபர் மக்ரோன்.

ஷெல்கள், பீரங்கிக் குண்டுகள், கவச வாகனங்கள், ஏவுகணைகள் மற்றும் போர் விமானங்கள் போன்றவற்றைத் தயாரிப்பதைத் துரிதப்படுத்துமாறு அதிபர் மக்ரோன் பணிப்புரை விடுத்துள்ளார். ஆனால் எவ்வளவு எண்ணிக்கையான ஆயுதங்கள் தேவை என்ற விவரத்தை அவர் குறிப்பிடவில்லை. இருப்பினும், ஆயுத உற்பத்திகளை இரண்டு மடங்காக பிரான்ஸ் அதிகரிக்கவுள்ளது என்று பிரெஞ்சு ஊடகங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

ரஷ்யாவின் அத்துமீறலும் ஆக்கிரமிப்பும் நாளுக்குநாள் அதிகரித்துவருகின்றது. ஆதலால், பிரான்ஸினதும், ஐரோப்பாவினதும் பாதுகாப்பை உறுதிப்படுத்த நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதாக மக்ரோன் அண்மையில் தெரிவித்திருந்தார். இதைத்தொடர்ந்து அவர் ஆயுத உற்பத்திகளை அதிகரிக்குமாறு உத்தரவிட்டுள்ளமை பரபரப்பான விடயமாக மாறியுள்ளது. (ம)

## ஹவுத்தி நிலைகள் மீது அமெரிக்கா குண்டுமழை!

சனா, மார்ச் 17

யேமனின் ஹவுத்தி கிளர்ச்சியாளர்கள் மீது அமெரிக்கா தலைமையிலான கூட்டுப் படையால் நேற்று இரவிரவாக தீவிரமான வான் தாக்குதல்கள் நடத்தப்பட்டுள்ளன.

செங்கடலிலும், மத்திய கிழக்குப் பகுதிகளிலும் பயணிக்கும் அமெரிக்கக் கப்பல்களையும், இஸ்ரேலின் கப்பல்களையும் இலக்குவைத்து தாக்குதல் நடத்தவுள்ளதாக ஹவுத்தி அமைப்பு அண்மையில் அறிவித்திருந்தது. இதைத் தொடர்ந்தே, அமெரிக்க அதிபர் ட்ரம்பின் உத்தரவுக்கு அமைய இந்தத் தாக்குதல்கள் நடத்தப்பட்டுள்ளன. இந்தத் தாக்குதல்களில் 21 ஆயுததாரிகள் கொல்லப்பட்டுள்ளனர் என்றும் அமெரிக்கா அறிவித்துள்ளது.

ஈரானால் உருவாக்கப்பட்ட இந்தக் காடையர்கள் அமெரிக்க விமானங்கள் மீது ஏவுகணைகளை ஏவியுள்ளனர். எங்கள் படையினரையும், எங்களின் சகாக்களையும் தாக்கியுள்ளனர். ஆதலால், அவர்களுக்கு நரகம் என்றால் என்ன என்பதைக் காட்டுவதே பொருத்தமானது. ஹவுத்திகளின் நேரம் நிறைவுக்கு வந்துவிட்டது என்று இந்தத் தாக்குதல் தொடர்பில் ட்ரம்ப் தெரிவித்துள்ளார். (ம)



## காஸாவில் இஸ்ரேல் இராணுவம் நடமாடும்!

### நெத்தன்யாகு விடாப்பிடி

டெல்அவிவ், மார்ச் 17

போர் முடிவுக்கு வந்த பின்னரும், காஸாவில் இஸ்ரேல் இராணுவம் தொடர்ந்து சுதந்திரமாக நடமாடும் வகையிலான ஏற்பாடுகள் செய்யப்படும் என்று இஸ்ரேலியப் பிரதமர் நெத்தன்யாகு அறிவித்துள்ளார்.

காஸா போருக்குப் பிந்தைய திட்டம் குறித்த விவரங்களைப் பெஞ்சமின் நெத்தன்யாகு வெளியிட்டிருக்கிறார். நெதன்யாகு தனது அமைச்சரவையின் ஒப்புதலுக்காக சமர்ப்பித்த அறிக்கையிலேயே, 'காஸாவில் போரின் பின்னரும் இஸ்ரேலிய இராணுவம் சுதந்திரமாக நடமாடும்' என்ற விடயத்தைக் குறிப்பிட்டுள்ளார்.

'போர் முடிவுக்கு வந்தாலும் காஸா முனையின் பாதுகாப்பு, இஸ்ரேலின் கட்டுப்பாட்டில் இருக்கும். சிவில் விவகாரங்களில் இஸ்ரேல் பங்கு வகிக்கும். பாதுகாப்பு அச்சுறுத்தலை முறியடிக்கும் வகையில், காசா முழுவதும் இஸ்ரேல் இராணுவம் சுதந்திரமாகச் செயற்படும். மேலும், காசாவுக்குள் ஒரு பாதுகாப்பு மண்டலத்தை நிறுவும்' என்றும் நெத்தன்யாகு அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிட்டுள்ளார். (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆணைக்குழுவை நியமித்து ஜே.வி.பி.யையும் விசாரிக்குக

## மனோகணேசன் எம்.பி.வலியுறுத்து

கொழும்பு, மார்ச் 17

**ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க பொதுவான ஆணைக்குழுவொன்றை நியமித்து ரணில் விக்கிரமசிங்கவிடமும் தமிழ், முஸ்லிம் அரசியல்வாதிகளிடமும் மாத்திரமின்றி ஜே.வி.பி.யினரிடமும் விசாரணைகளை முன்னெடுக்கவேண்டும் எனத் தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் நாடாளுமன்ற உறுப்பினர் மனோகணேசன் தெரிவித்துள்ளார்.**

கொழும்பில் இடம்பெற்ற ஊடக வியலாளர் மாநாட்டில் அவர் மேலும் குறிப்பிடுகையில்,

பட்டலந்த வதைமுகாம் தொடர்பான அறிக்கை சட்டமா அதிபரிடம் சமர்ப்பிக்கப்பட்டு, அது தொடர்பில் வழக்குத் தொடரப்பட வேண்டும். அங்கு இடம்பெற்ற கொலைகள் உள்ளிட்ட குற்றச்செயல்கள் தொடர்பில் ஆராய வேண்டும். எனினும் பட்டலந்த வதைமுகாம் பற்றி மாத்திரம் ஏன் விசாரிக்கவேண்டும் என்ற கேள்வி தமிழ்மக்கள் மத்தியில் காணப்படுகிறது.

1948ஆம் ஆண்டிலிருந்து பல்வேறு சந்தர்ப்பங்களில் தமிழர்களுக்கெதிரான குற்றச்செயல்கள் இடம்பெற்றுள்ளன. அதன் பின்னர் வெலிக்கடைச் சிறைச்சாலை படுகொலை, இறுதிப் போரின்போது தமிழர்கள் கொல்லப்பட்டமை, குடும்பத்தோடு சென்று இராணுவத்திடம் சரணடைந்தவர்கள், கொழும்பில் இடம்பெற்ற கொலைகள், கடத்தல், காணாமல் ஆக்கப்படுதல் என்பன தொடர்பிலும் விசாரணைகள் முன்னெடுக்கப்படவேண்டும். அரசாங்கத்துக்கு அரசியல் இலாபம் கிடைக்கக்கூடிய தேர்ந்தெடுக்கப்பட்ட சம்பவங்கள் தொடர்பாக மாத்திரமின்றி அனைத்து மனித உரிமை மீறல்கள் குறித்தும் விசாரணைகள் முன்னெடுக்கப்படவேண்டும்- என்றார். (ச-இ)

# சிறைப்பேருந்து விபத்தில் 6 கைதிகள் காயம்

கொழும்பு, மார்ச் 17

சிறைச்சாலைக் கைதிகள் சிலரை ஏற்றிச்சென்ற பஸ் விபத்தில் சிக்கியதில் 6 பேர் காயமடைந்துள்ளனர்.

சிறைச்சாலை பஸ்ஸும் லொறியொன்றும் ஒன்றுக்கொன்று மோதிக்கொண்டதனால் இந்த விபத்து ஏற்பட்டுள்ளது. காயமடைந்தவர்கள் கராப்பிட்டி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். உடுகம மஜிஸ்ரேட் நீதிமன்றத்தில் சந்தேகநபர்கள் சிலரை முன்னிலைப்படுத்திய பின்பு மீண்டும் அவர்களைக் காலி சிறைச்சாலை நோக்கி கொண்டுவரும்போதே இந்த விபத்து நேர்ந்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ச-சீ)

# கிழக்குப் பல்கலையில் மாணவர்களிடையே மோதல்

மட்டக்களப்பு, மார்ச் 17

கிழக்குப் பல்கலைக்கழகத்தில் மாணவர்களுக்கிடையே கடந்த வெள்ளிக்கிழமை ஏற்பட்ட மோதலில் ஒருவர் படுகாயமடைந்துள்ளார். கிழக்குப் பல்கலைக்கழக வந்தாறுமூலை வளாகத்தில் வர்த்தகப் பிரிவு இரண்டாம் ஆண்டு மாணவர்களுக்கு இடையிலேயே இவ்வாறு மோதல் ஏற்பட்டுள்ளது. இதில் காயமடைந்த மாணவன் ஏறாவூர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். (ச-இ)

### மாணவிக்கு 'ஐ லவ் யூ' சொன்ன

# மாணவனுக்குப் பிரம்படி; அதிபர் மீது முறைப்பாடு

மட்டக்களப்பு, மார்ச் 17

பாடசாலை ஒன்றில் தரம் 10 இல் கல்வி கற்கும் மாணவி ஒருவருக்கு 'ஐ லவ் யூ' சொன்ன அதே வகுப்பில் கற்கும் மாணவனை அதிபர் பிரம்பால் கண்டித்துள்ளார். இதனை மாணவன் தனது பெற்றோரிடம் தெரிவித்த நிலையில் பெற்றோர் மாணவனை மருத்துவமனையில் சேர்த்ததுடன் அதிபருக்கு எதிராகப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளனர். இந்தச் சம்பவம் மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள பாடசாலை ஒன்றில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்றுள்ளதாக அந்தப் பிரதேச பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதுதொடர்பாக மேலதிக விசாரணைகளை சிறுவர் பெண்கள் பிரிவுப் பொலிஸார் மேற்கொண்டுவருகின்றனர். (ச-இ)



# சீனா – இந்தியாவுடனான நட்புறவு; இலங்கை வலுப்படுத்தவேண்டும்

## சஜித் பிரேமதாஸ தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 17

இந்தியாவுடனான நட்புறவை இலங்கை வலுப்படுத்தவேண்டும் எனவும் சீனாவுடன் சுதந்திர வர்த்தக ஒப்பந்தத்தில் கைச்சாத்திடவேண்டும் எனவும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

2025 ஆம் நிதியாண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தில் வெளிநாட்டலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சுக்கான நிதி ஒதுக்கீடு தொடர்பான குழுநிலை விவாதம் நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்றபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல், கொரோனாத் தொற்று, பொருளாதார நெருக்கடி என்பவற்றின்போது இந்தியாவே இலங்கைக்குக் கூடுதல் உதவிகளை வழங்கியது.

எனவே, இந்தியாவுடனான நட்புறவை வலுப்படுத்தவேண்டும். இந்தியாவுடன் சுதந்திர வர்த்தக ஒப்பந்தத்துக்கு அரசாங்கம் செல்லவேண்டும். அதேபோல சீனாவுடனும் சுதந்திர வர்த்தக உடன்படிக்கைக்குத் தயாராகவேண்டும். உலகில் அதிக சனத்தொகை கொண்ட நாடுகளாக இவை உள்ளன. எனவே, சந்தை வாய்ப்புகளைப் பெறமுடியும். 2028 இல் கடன் மீளச் செலுத்தவேண்டுமெனில் வெளிநாட்டு முதலீடுகளை அதிகரிக்கவேண்டும்.

அதற்குரிய பொறிமுறை உருவாக்கப்படவேண்டும் - என்றார். (ச-44)

# பிரமிட் மோசடி மூவர் கைது



கொழும்பு, மார்ச் 17

சட்டவிரோதமான முறையில் பிரமிட் முதலீட்டுத்திட்டத்தைச் செயற்படுத்தி 1.5 பில்லியன் ரூபாவுக்கும் அதிகமான நிதியை மோசடி செய்த குற்றச்சாட்டில் மூவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

கைதான மூவரும் கொழும்பு நீதிமன்றில் முற்படுத்தப்பட்டபோது அவர்களை எதிர்வரும் 17ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது. (ச-இ)



# பொதுநிதி பயன்படுத்தி ரணில் தனிப்பட்ட பயணம்

## அமைச்சர் பிமல் குற்றச்சாட்டு

கொழும்பு, மார்ச் 17


முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க 2023 ஆம் ஆண்டு தனது மனைவியுடன் ஐக்கிய இராச்சியத்துக்கு தனிப்பட்ட விஜயம் மேற்கொண்டதற்காக 40 ஆயிரம் ஸ்டெர்லிங் பவுண்டுகள் (ரூ. 16 மில்லியனுக்கும் அதிகமான) பொதுநிதியைப் பயன்படுத்தியுள்ளார் என்று சபைத் தலைவர் அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

தனியார் பயணத்துக்காகப் பொது நிதியைப் பயன்படுத்துவது குற்றம் என்று தெரிவித்த அமைச்சர், இந்தச் சம்பவம் குறித்து விசாரணை நடத்த வெளியுறவு அமைச்சகத்தை வலியுறுத்தினார்.

விக்கிரமசிங்க மற்றும் அவரது மனைவியுடன் பத்துப் பேர் கொண்ட குழு இந்தப் பயணத்தில் ஈடுபட்டது. இந்தப் பயணம் ஆரம்பத்தில் ஒரு தனிப்பட்ட பயணமாக விவரிக்கப்பட்டதாகவும், பின்னர் நிதியைப் பெறுவதற்காக ஜனாதிபதி செயலகம் அனுப்பிய கடிதத்தில் உத்தியோகபூர்வ பயணமாக காட்டப்பட்டுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 175 ஆம் ஆண்டு நினைவும் பாராட்டு வாழ்தும்



ரவி அமிர்தன்



## சம்பத்திரிசியார் கல்லூரி வாழ்க !!

அச்சமின்றிப் பாடுவோம்
ஆனந்தக் கூத்தாடுவோம்
உச்சம்பெற்ற உணர்வுகளை
உலகத்திலே பேணுவோம்

இச்சையுடன் பற்றிக்ஸ் புகழ்
இனிமையோடு சாற்றுவோம்
மிச்சமில்லை என்னும்வரை
மிகுந்து நாமும் சொல்லுவோம்

பச்சை நிறம் பற்றிக்ஸ் நிறம்
பத்திரிசியார் பள்ளிக்கூடம்
பற்றுக்கொண்டு படித்தவர்கள்
பெற்றுக்கொண்ட அறிவுமே

முற்றும் கற்று முழுதும் பெற்ற
உற்ற கல்வி மறவோமே
சுற்றமெல்லம் உயர்த்திவிட்ட
பற்றிக்ஸையும் மறவோமே

அரிச்சுவடி தரித்த கல்வி
அந்த நாளில் நின்றுமே
பெரிய கல்வி பெற்றுவிட்டு
உரிய உயர்வு கண்டுமே

விரிந்த புகழ் வீரர் திறம்
விளையாட்டிலும் கண்டுமே
விண்ணுயர வாழவைத்த
வித்தியாசாலை வாழ்கவே

யாழ்நகர்க்கு வாழ்வுதந்த
பத்திரிசியார் கல்லூரியாம்
தாழ்வகற்றி திறமை தந்த
தாயுமான கற்பகம்

ஆழ்கடலின் முத்துப்போல
அறிஞர் நெஞ்சில் வாழுமே
வீழ்வதெல்லாம் எழுச்சிக்கென்று
வாழும் அறிவு தந்ததே

கதைகளோடு கற்றகல்வி
கருத்தில் இன்னும் நிறையுதே
உதைபந்தாட்டம் உலகின்முன்னே
உயரக் கொண்டு சென்றதே

விதை கொடுத்து வினையும்தந்த
விளை நிலமே கல்லூரி
புதையலாக பெற்றுவிட்டோம்
பெருமை கொண்டு வாழுவோம்

நூற்றெழுபத்தைந்து வருடம் வாழ்ந்த
ஆற்றல் சொல்லி மகிழுவோம்
காற்றில் கூட பெருமை கேட்டு
கல்வியோடு உயருவோம்

ஏற்றிவைத்த எங்கள் கல்வி
என்றும் எம்முள் வாழுமே
ஈற்றில் இறைவன் கருணைகண்டு
இறுதிவரை வாழ்த்துவோம் !!

வாழ்த்துவோர்
- ரவி அமிர்தன்
(கனடா)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலங்கை,...

களுக்கும் இடையில் சீன அரசாங்கத்தின் செயற்பாட்டு அறிக்கை மற்றும் வெளிவிவகாரக் கொள்கை மற்றும் உறவுகள் தொடர்பான கலந்துரையாடல் நடைபெற்றபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

ஆசியக் கண்டத்தில் இந்தியாவும், சீனாவும் மிகப்பெரிய நாடுகள். இரு நாடுகளும் நட்பு நாடுகள். ஒரே எல்லையைக் கொண்ட நாடுகளாகவும் உள்ளன. பாரம்பரிய நாகரிகத்தையும் கொண்ட நாடுகளாகவும் உள்ளன. இரு நாடுகளிலும் பெரும் சந்தை வசதி காணப்படுகின்றது. அதேநேரம் இரு நாடுகளுக்கும் பொருளாதார அபிவிருத்தி என்ற ஒரே இலக்கும் காணப்படுகின்றது. இரு நாடுகளுக்கும் இடையிலான இருதரப்பு உறவுகள் முன்னேற்றமடைந்து மேம்பட்டவையாக இருக்க வேண்டியது அவசியமாகும்.

மோடி தலைமையிலான இந்தியாவும், ஷி ஜின்பிங் தலைமையிலான சீனாவும் முரண்பாடுகளை களைந்து நல்லிணக்கத்துடன் பயணிக்க வேண்டியது அவசியமாகிறது -என்றார். (அ-எ-இ)

## 'பட்டலந்த'...

இது தொடர்பாக அவர் தெரிவித்துள்ளதாவது:-

வாக்குறுதியளித்தபடி அரசாங்கம் அறிக்கையை நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்துள்ளது. எதிர்வரும் ஏப்ரல் மாதம் 10 ஆம் திகதி மற்றும் மே மாதம் இரு நாள்களில் விவாதம் நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

இந்த விவகாரம் தொடர்பாக ஒரு குழுவை நியமிக்க அரசாங்கம் முடிவு செய்துள்ளது. அறிக்கையை நாங்கள் சட்டமா அதிபர் திணைக்களத்துக்கும் அனுப்புவோம்.

விவாதத்தை நடத்துவதற்கு எதிராக ஐக்கிய தேசியக் கட்சியும், எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவின் ஐக்கிய மக்கள் சக்தியும் வாதிட்டன. ஆயினும் விவாதத்துக்கான திகதியை அரசாங்கம் ஒதுக்கியுள்ளது. நாட்டில் ஜனநாயகம் மற்றும் நீதிக்காக நாங்கள் விவாதம் நடத்துவோம். மக்கள் உண்மையை அறிந்து கொள்ளவேண்டும்.

பட்டலந்த சம்பவம் குறித்து முழு விவரமும் அறிந்தவர் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க. அண்மைய அல் ஜெஸீரா நேர்காணலில்அது தொடர்பாகக் கேள்வி எழுப்பும் வரையில் அவர் அதைப்பற்றி ஒருபோதும் பேசவில்லை. கடந்த 35 ஆண்டுகளில் ரணில் விக்கிரமசிங்க இது தொடர்பில் பேசியிருக்கலாம். இப்போது அவர் அதுதொடர்பில் பேச முயன்றாலும், மிகக் காலதாமதமாகிவிட்டது -என்றார். (அ-எ-இ)

## க.பொ.த...

தாள்கள் பரீட்சை நிலையங்களுக்கு அனுப்பப்பட்டுள்ளன என்று பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இன்று ஆரம்பமாகும் பரீட்சை எதிர்வரும் 26ஆம் திகதிவரை நடைபெறவுள்ளது. 3 ஆயிரத்து 663 நிலையங்களில் நடக்கும் பரீட்சையில், 4 லட்சத்து 78 ஆயிரத்து 182 பரீட்சார்த்திகள் தோற்றுகின்றனர். அவர்களில் 3 லட்சத்து 98 ஆயிரத்து 182 பேர் பாடசாலைப் பரீட்சார்த்திகளாவர். (அ-எ-இ)


## யாழ் மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி சங்கம் (யாழ்கோ) இற்கு நெறியாளர் குழு உறுப்பினர்கள் தெரிவு - 2025

யாழ் மாவட்ட கூட்டுறவு அபிவிருத்திச் சங்கத்தின் உப விதிப்பிரிவு 35.1 இற்கு அமைவாக இரண்டு நெறியாளர் குழு உறுப்பினர்களை மாவட்ட அரசாங்க அதிபரின் சிபாரிசுடன் நியமிக்க வேண்டும். இந் நிறுவனமானது கலாசாலை வீதி, திருநெல்வேலியில் தலைமைக் காரியாலயத்தினை கொண்டு இயங்கிவருகின்றது.

விண்ணப்பதாரர்களின் தகைமை, விண்ணப்பம் பெற்றுக்கொள்ளல், விண்ணப்பம் அனுப்புதல் போன்ற விபரங்களையும் Expression of Interest படிவத்தினையும் jaffna.dist.gov.lk எனும் மாவட்ட செயலக இணையத்தளத்தில் பார்வையிடவும் தரவிறக்கம் செய்துகொள்ளவும் முடியும்

*** விண்ணப்ப முடிவுத் திகதி**

மாவட்ட செயலகத்திற்கு நேரடியாகவோ அல்லது மாவட்ட செயலாளர், மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு பதிவுத் தபால் மூலமாகவோ 2025.03.28 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு முன்னராக மாவட்ட செயலகத்திற்கு கிடைக்கக் கூடியதாக அனுப்புதல் வேண்டும்

**மாவட்டச் செயலாளர் / அரசாங்க அதிபர் (பதில்)**
**யாழ்ப்பாண மாவட்டம்,**
(cr 44578) (N-1)


## வவுனியா வெங்கலச்செட்டிகுளம் பிரதேச சபையின் கேள்வி அறிவித்தல் - 2025

### வெங்கலச்செட்டிகுளம் பிரதேச சபைக்கு சொந்தமான கடைகளை ஒரே கொடுப்பனவு (Key Money) அடிப்படையில் வழங்குவதற்கான மீள் கேள்வி

**கேள்வி அறிவித்தல் அட்டவணை**

| இல. | கடை விபரம் | மாதாந்த வாடகை | கேள்விப் படிவக்கட்டணம் (ரூபா.) | மீளளிபடும் கேள்வி வைப்பு (ரூபா.) | ஆகக்குறைந்த கேள்வித்தொகை, (ரூபா.) |
|---|---|---|---|---|---|
| 01 | சூடுவெந்தபுலவு கடைத்தொகுதி – கடை இல 01 | 6000.00 | 1000.00 | 8000.00 | 1,224,000.00 |
| 02 | சூடுவெந்தபுலவு கடைத்தொகுதி – கடை இல 02 | 6000.00 | 1000.00 | 8000.00 | 1,224,000.00 |
| 03 | சூடுவெந்தபுலவு கடைத்தொகுதி – கடை இல 03 | 6000.00 | 1000.00 | 8000.00 | 1,224,000.00 |
| 04 | சூடுவெந்தபுலவு கடைத்தொகுதி – கடை இல 04 | 6000.00 | 1000.00 | 8000.00 | 1,224,000.00 |
| 05 | சூடுவெந்தபுலவு கடைத்தொகுதி – கடை இல 05 | 6000.00 | 1000.00 | 8000.00 | 1,224,000.00 |
| 06 | சூடுவெந்தபுலவு கடைத்தொகுதி – கடை இல 06 | 6000.00 | 1000.00 | 8000.00 | 1,224,000.00 |
| 07 | சூடுவெந்தபுலவு கடைத்தொகுதி – கடை இல 07 | 6000.00 | 1000.00 | 8,000.00 | 1,224,000.00 |

1. கேள்விப்பத்திரங்கள் வழங்கப்படும் காலம் - 17.03.2025 – 01.04.2025 ந் திகதி வரை அலுவலக நாட்களில் காலை 9.00 மணி தொடக்கம் மாலை 3.00 மணி வரை
2. கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித்திகதி - 02.04.2025 ம் திகதி காலை 10.00 மணி வரை
3. கேள்விப்பத்திரங்கள் திறக்கப்படும் காலம் - 02.04.2025ந் திகதி காலை 10.00 மணிக்கு
4. 02.04.2025 திகதி காலை 10.00 மணிக்குப்பின்பு கிடைக்கப்பெறும் கேள்வி விண்ணப்பங்கள் அனைத்தும் நிராகரிக்கப்படும்.
5. கேள்விப்பத்திரங்களைப் பெறவிரும்பும் விண்ணப்பதாரிகள் இலங்கைப்பிரஜையாக இருப்பதுடன் கிராம சேவையாளரின் சான்றிதழுடன் தமது தேசிய அடையாள அட்டை மற்றும் அதன் நிழற்பிரதியுடன் நேரடியாக சமுகமளித்தல் வேண்டும்.
6. கேள்விப்படிவங்கள் இரண்டு பிரதிகளில் வழங்கப்படும். **அவை இரண்டையும் ஒரே மாதிரியாக பூரணப்படுத்தி தனித்தனி தபால் உறைகளில் இட்டு தபாலுறையின் இடது பக்கமேல் மூலையில் கேள்வியின் பெயர், கடையின் பெயர் என்பன தெளிவாக இடப்பட்டு அரக்கு முத்திரையிட்டு செயலாளர், வெங்கலச்செட்டிகுளம் பிரதேச சபை, மன்னார் மதவாச்சி பிரதான வீதி, செட்டி குளம், வவுனியா** எனும் முகவரிக்கு பதிவுத்தபால் மூலமாகவோ அல்லது பிரதேச சபை அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப்பெட்டியிலோ உரிய நேரத்திற்கு முன்பதாக கிடைக்கக்கூடியதாக சேர்க்கப்படுதல் வேண்டும்.
7. கேள்விப்படிவத்தினைப் பெறுபவர் ஏற்கனவே பிரதேச சபையினால் தவறுநராக கணிக்கப்பட்டு கறுப்புப்பட்டியலில் சேர்க்கப்பட்டவராகவோ அல்லது சபைக்கு எவ்வித நிலுவைக்கட்டணங்களையும் முன்னைய காலங்களில் அல்லது நடப்பு ஆண்டில் செலுத்தத் தவறியவர்களாக இருந்தால் அவர்களது கேள்வி நிராகரிக்கப்படுவதுடன் இது தொடர்பான வைப்புக்கள் மீளளிக்கப்பட மாட்டாது.
8. ஆகக்குறைந்த கேள்வித் தொகையிலும் குறைவாக கேள்வி கோருபவர்களது கேள்வி நிராகரிக்கப்படுவதுடன் இது தொடர்பான வைப்புக்கள் மீளளிக்கப்பட மாட்டாது.
9. கேள்வி திறத்தலின்போது கேள்விதாரர் அல்லது அவரால் எழுத்து மூலமாக அதிகாரமளிக்கப்பட்டவர் பார்வையாளராக கலந்து கொள்ள முடியும்.
10. அதிகூடிய கேள்வித்தொகையினை சமர்ப்பித்தவருக்கே குத்தகை வழங்கப்படுவதுடன், அவர் குத்தகை எடுக்கத்தவறின் அடுத்த நிலையிலுள்ள கேள்விதாரரின் கேள்வித்தொகை திருப்தியாக அமைந்தால் பரிசீலிக்கப்படலாம்.
11. சித்தியெய்தும் கேள்விதாரர் தங்களது கேள்வித்தொகையினை எம்மால் குறிப்பிடப்படும் திகதிக்கு முன்னர் ஒரே தடவையில் செலுத்தி ஒப்பந்தம் மேற்கொள்ளப்படுதல் வேண்டும். தவறின் அவரது கேள்வி இரத்துச்செய்யப்படுவதுடன் கேள்வி வைப்பும் மீளளிக்கப்படமாட்டாது.
12. கேள்வி நிபந்தனைகள், அறிவுறுத்தல்களிற்கு அமையாத கேள்விக்கோரிக்கைகளை நிராகரிக்கவும், எந்தவொரு கேள்வியையும் காரணம் காட்டாது ஏற்கவோ நிராகரிக்கவோ சபையின் செயலாளர்க்கு பூரண அதிகாரம் உண்டு.
13. குத்தகை எடுத்தவரே அலுவலக தொடர்பாடல்களை ஏற்படுத்திக்கொள்ளல் வேண்டும்.
14. கேள்வி தொடர்பான மேலதிக விபரங்களை வெங்கலச்செட்டிகுளம் பிரதேச சபை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

**குறிப்பு : கேள்விச்சபையின் தீர்ப்பே இறுதியானது.**

**செயலாளர்,**
**பிரதேச சபை,**
**வெங்கலச்செட்டிகுளம்.**
(CS 57686) (N-1)

## இருபத்திரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 30.01.1939 மறைவு 19.02.2003

### அமரர் கார்த்திகேசு சந்திரராசா (SLAS)

(ஓய்வுபெற்ற பிரதேச செயலாளர் - வலிமேற்கு சங்கானை, முன்னாள் திட்டப் பணிப்பாளர் - UNHCR)

**திதி: 17.03.2025**

பதினோரிரண்டு ஆண்டுகளாய் பரிதவிக்கவிட்டு
சென்றீர்களே - அப்பா!
இந்நாளை நினைக்கும் போதெல்லாம்
நெஞ்சம் கனக்கிறதப்பா.......
உங்கள் நினைவுகளை பகிரும்
போதெல்லாம் எங்கள் மனம்
இறுகிப்போகுதப்பா.........
நீங்கா நினைவுகளுடன்

பறாளாய் வீதி, சுழிபுரம். குடும்பத்தினர்
(cs 57761) (N-1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இனமுறுகலை ஏற்படுத்த அர்ச்சுனா எம்.பி. முயற்சி

## யாழ். முஸ்லிம்களின் ஒன்றிய அமைப்பு கண்டனம்

யாழ்ப்பாணம், மார்ச் 17
யாழ்ப்பாண முஸ்லிம்கள் தொடர்பாக நாடாளுமன்ற உறுப்பினர் அர்ச்சுனா இராமநாதன் விசத்தைக் கக்கியுள்ளார்.

ஒரு இனத்தையே படுகொலை செய்ய வேண்டும் என்ற ரீதியில் நாடாளுமன்ற உறுப்பினர் அர்ச்சுனா இராமநாதன் தெரிவித்துள்ள கருத்து தண்டனைக்குரிய குற்றமாகும். தமிழ், முஸ்லிம் இனங்களுக்கிடையே இருக்கும் ஒற்றுமையைக் குலைத்து இனமுறுகலை ஏற்படுத்த அவர் முனைகின்றார்.

இவ்வாறு பாதிக்கப்பட்ட யாழ்ப்பாண முஸ்லிம்களின் ஒன்றிய அமைப்பு தெரிவித்துள்ளது.

இந்த அமைப்பு விடுத்துள்ள செய்தி அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

1990ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் இருந்து முஸ்லிம் மக்கள் வெளியேற்றப்பட்ட சம்பவத்துக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பு வருத்தம் தெரிவித்திருந்தது. அவ்வாறிருக்கையில் யாழ்ப்பாணம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அர்ச்சுனா இராமநாதன் "விடுதலைப் புலிகளின் தலைவர் யாழ்ப்பாண முஸ்லிகளை விரட்டியது தவறு, அவர்களை இங்கே வைத்து சீமெந்து பூசியிருக்க வேண்டும்" என்று விசத்தைக் கக்கியுள்ளார். இவரின் கருத்து ஒட்டுமொத்த யாழ்ப்பாண முஸ்லிம்களையும் சமாதி ஆக்கியிருக்க வேண்டும் என்பதே.

ஒரு இனத்தையே படுகொலை செய்திருக்க வேண்டும் என்ற ரீதியில் நாடாளுமன்ற உறுப்பினர் அர்ச்சுனா இராமநாதன் தெரிவித்திருக்கும் கருத்து தண்டனைக்குரிய குற்றமாகும். ஒரு மருத்துவராக பல உயிர்களைக் காக்கவேண்டிய பொறுப்பில் உள்ள இவரது கேவலமான பேச்சு, முஸ்லிம் இனத்தையே அதிர்ச்சிக்குள்ளாகியுள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினர் அர்ச்சுனா இராமநாதன் முஸ்லிம் மக்களை இலக்கு வைத்தும், முஸ்லிம் மார்க்க விடயங்களில் விசமத்தனமான கருத்துகளையும் அண்மைக்காலமாக நாடாளுமன்றத்தில் தெரிவித்து வருகின்றார். இவரது கருத்துக்கள் அனைத்தும் இனவாதத்தைத் தூண்டும் வகையில் உள்ளன. நாடாளுமன்ற உறுப்பினரின் அடாவடித்தனத்தை அரசாங்கம் உடனடியாக முடிவுக்குக் கொண்டுவர வேண்டும்.


நாடாளுமன்றம் என்பது மக்களுடைய அபிவிருத்தி, உரிமைகள் தொடர்பாக விடயங்கள் பேசப்பட வேண்டிய இடம். ஆனால் இப்போது இனவாதமே கூடுதலாகப் பேசப்படுகின்றது. நாட்டின் அமைதிக்குக் குந்தகம் விளைக்கும் இவ்வாறான செயற்பாடுகள் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும் - என்றுள்ளது. (எ-இ)



யாழ்ப்பாணம் சென். ஜேன்ஸ் முன்பள்ளி சிறுவர்களின் சிறிய கற்றல் சந்தை நிகழ்வு சுண்டுக்குளி, சென். ஜோன்ஸ் ஆலய அருட்தந்தை எஸ்.ரீ.ஜெப செல்வன் தலைமையில் முன்பள்ளி வளாகத்தில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்றது. நிகழ்வில் பெற்றோர்கள், பழைய மாணவர்கள், ஆசிரியர்கள் எனப் பலரும் கலந்துகொண்டு பொருள்களைக் கொள்வனவு செய்து சிறுவர்களை மகிழ்வித்தனர். (எ-22)


## மரண அறிவித்தல்

### செல்லையா தெய்வேந்திரம்




தோற்றம் 01.08.1945 — இறப்பு 15.03.2025

ஊரெழு மேற்கை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்லையா தெய்வேந்திரம் 15.03.2025 (சனிக்கிழமை) அன்று காலமானார். இவர் காலம் சென்றவர்களான செல்லையா அன்னம்மா ஆகியோரின் அன்பு மகனும், காலம்சென்றவர்களான பொன்னையா தங்கரத்தினம் ஆகியோரின் பாசமிகு மருமகனும், காலம் சென்றவர்களான சின்னக்கிளி அவர்களின் பாசமிகு கணவரும், காலம் சென்றவர்களான அற்புதநாதன், லீலாவதி, இராசையா, செல்வராசா மற்றும் சரஸ்வதி ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலம் சென்றவர்களான சிவபாக்கியம், சின்னையா, ஈஸ்வரி, பரராசசிங்கம், கனகம்மா மற்றும் குகனேஸ்வரி, சுப்பிரமணியம், சணிமுகநாதன், பத்மாவதி (கமலம்) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அனினாரின் இறுதிக் கிரியைகள் அவரது இல்லத்தில் 17.03.2025 (இன்று) பிற்பகள் 12.00 மணியளவில் இடம் பெற்று ஊரெழு பொக்கனை இந்துமயானத்தில் தகனக்கிரியைக்காக பூதவுடல் எடுத்துச்செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.
076 037 3047
(CS 29931)V-1

## மரண அறிவித்தல்



பிறப்பு 17 . 12 . 1947 — இறப்பு 15 . 03 . 2025

### யோசேப் ஞானப்பிரகாசம் தர்மரட்ணம் (தர்மம்)

315 பாங்சால் வீதியை பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட யோசேப் தர்மரட்ணம் (தர்மம்) நேற்றுமுன்தினம் (15.03.2025) சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான யோசேப் ஞானப்பிரகாசம் மேரி அக்னஸ் தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற தர்மரட்ணம் மேரி அன்புக் கணவரும், சௌமியாவின் பாசமிகு தந்தையும், காலஞ்சென்றவர்களான அகஸ்ரின், அருளானந்தம், விக்ரர், சிறில் மற்றும் பேனாட் (பிரான்ஸ்), பற்றிக் (லண்டன்), செல்வம் (யாழ்ப்பாணம்), நவரட்ணம் (ஜேர்மனி), மரியநாயகம் (லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்றவர்களான அற்புதம், திரேசம்மா, இந்திரா மற்றும் லில்லி, மாக்கிறேற் தோமினிக்கா, கத்தரீன், எனஸ்ரீன், தர்மலோஜினி, கத்தலீன் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிசடங்குகள் நாளை (18.03.2025) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு யாழ்ப்பாணம் புனித மரியன்னை பேராலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.
315 பாங்சால் வீதி,
யாழ்ப்பாணம்
மரியநாயகம் - 076 861 1316
மாலினி - 076 118 2656

## மரண அறிவித்தல்



தோற்றம் 28 . 02 . 1940 — மறைவு 15 . 03 . 2025

### திருமதி கதிர்காமத்தம்பி இரத்தினேஸ்வரி (பேபி அக்கா)

யாழ், வடக்கம்பராய் (தொல்புரம்) பிறப்பிடமாகவும் தாவடியை வாசிப்பிடமாகவும் கொண்ட இரத்தினேஸ்வரி அவர்கள் நேற்று முன்தினம் (15.03.2025) சனிக்கிழமை அன்று காலமானர்.

அன்னார் காலஞ்சென்ற நாகலிங்கம் பொன்னம்மா தம்பதியின் கனிஸ்ர புதல்வியும் காலஞ்சென்ற கதிர்காமத்தம்பி என்பவரின் பாசமிகு மனைவியும் கருணேஸ்வரன், காலஞ்சென்ற சயந்தன் மற்றும் நிரஞ்சன், இராமேஸ்வரன் (றமேஸ்), மதுரேஸ்வரி (மதுரா) என்பர்களின் பாசமிகு தாயாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடலானது நாளை (17.03.2025) திங்கட்கிழமை காலை 9.00 மணியிலிருந்து மாலை 4.00 மணிவரை வடிகம்பராய் (தொல்புரம்) அவரது இல்லத்தில் அஞ்சலிக்காக வைக்கப்படும் பின்னர் அவரது தாவடியில் உள்ள அவரது இல்லத்திற்கு எடுத்துச்செல்லப்பட்டு 18.03.2025 செவ்வாய்க்கிழமை 2.00 மணிக்கு கிரியைகள் நடைபெற்று பூதவுடல் மாலை 4.00 மணிக்கு தகனத்திற்கு தாவடி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
குடும்பத்தினர்.
076 195 1986, 077 639 4744
(CS29929) V-1


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கீதம் வெளியீடு

பளை, மார்ச் 17
பச்சிலைப்பள்ளிப் பிரதேச மகளிர்தின கீதம் கடந்த வெள்ளிக்கிழமை வெளியிடப்பட்டது. பிரதேச செயலரும் கவிஞருமான இ. த. ஜெயசீலனின் எழுத்துருவாக்கத்தில் வவேந்திரன் பிரசாத்தின் இசையில் பிரதேச செயலக அபிவிருத்தி உத்தியோகத்தர்களான திருமதி பிரசாத் அமுதினி, திருமதி கிருபதயாபரன் சுபாசினி ஆகியோர் பாடலைப் பாடியிருந்தார்கள். (ச-25,9)

## பெண்களுக்கான

# பாதுகாப்புச்சட்டங்களை கடுமையாக்க வேண்டும்!

### மன்னார் பெண்கள் வலையமைப்பு பிரதமருக்குக் கடிதம்

**மன்னார் , மார்ச் 17**

**சர்வதேச மகளிர்தின வாரத்தில் நடந்த அநுராதபுரம் மருத்துவமனையில் பெண் மருத்துவரொருவருக்கு நிகழ்ந்த கொடூரம் கரும்புள்ளியாக அமைந்துள்ளது என்று தெரிவித்து மன்னார் பெண்கள் வலையமைப்புத் தெரிவித்துள்ளது.**

இந்தச் சம்பவத்தைக் கண்டித்தும் குறித்த பாலியல் வன்கொடுமையைக் கண்டித்தும், பெண்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தக் கோரியும் இந்த அமைப்பால் பிரதமருக்கு கடிதமொன்றும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது-

அநுராதபுரத்தில் பணியாற்றும் பெண் மருத்துவருக்கு, இராணுவத்திலிருந்து தப்பியோடிய இராணுவச் சிப்பாயால் கத்திமுனையில் இழைக்கப்பட்ட உடல்ரீதியான வன்கொடுமை ஒட்டுமொத்தப் பெண்களின் கண்ணியம், பாதுகாப்பு, நம்பிக்கை ஆகியவற்றின்மீது இழைக்கப்பட்ட குற்றச்செயலாகும்.

இது பெண்கள் நலிந்த நிலையில் உள்ளார்கள் என்பதை எடுத்துரைக்கின்றது. பெண்களுக்கான பாதுகாப்பு மற்றும் நீதி முதன்மைப்படுத்தப்படவேண்டும்.

சட்டநடைமுறைகள் மீள் ஒழுங்குபடுத்தப்படவேண்டும். சமகாலங்களில் நடைபெறுகின்ற குற்றச் செயல்களை உற்றுநோக்குகின்றபோது இராணுவத்திலிருந்து தப்பியோடிய நபர்கள் சுமூகங்களில் இழைக்கப்படுகின்ற குற்றச்செயல்களில் பெரும்பங்கை வகிக்கின்றனர். இந்த இழிவான செயல்கள் பாதுகாப்புப்படையினரின் பொறுப்புடைமையையும் ஒழுக்கத்தையும் கேள்விக்குறியாக்குகின்றன. எதிர்வரும் காலங்களில் இவ்வாறான குற்றச் செயல்கள் நடைபெறுவதை முற்றாகத் தவிர்க்கவேண்டும்- என்றுள்ளது. (ச-25, 27,20)



# சாதனையாளர்களுக்கு விருதுவழங்கும் விழா

இலங்கை - இந்திய நட்புறவு ஒன்றியத்தின் ஏற்பாட்டில் சாதனையாளர்களைக் கௌரவிக்கும் 'டொப் 100' விருதுவழங்கும் விழா நேற்றுமுன்தினம் சனிக்கிழமை கண்டியில் இடம்பெற்றது.

இதில் இலங்கை முழுவதுமுள்ள கலைஞர்கள், ஆசிரியர்கள், சமூக செயற்பாட்டாளர்கள், ஊடகவியலாளர்கள், ஊடகத்துறை சார்ந்தவர்கள் மற்றும் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த அரச ஊடகவியலாளர் பி.லின்ரன், சுயாதீன ஊடகவியலாளர் கே.எம்.வித்தகன் ஆகியோர் கௌரவிக்கப்பட்டனர். (ச-41-27)



# பெண் சாதனையாளர்கள் வடமராட்சியில் கௌரவிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 17
சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு வடமராட்சி வடக்குப் பிரதேச செயலகத்தால் நடத்தப்பட்ட பெண் சாதனையாளர்கள் விருதுவழங்கும் நிகழ்வு கடந்த வெள்ளிக்கிழமை பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது.

வடமராட்சி வடக்குப் பிரதேச செயலாளர் சிவபாதசுந்தரம் சத்தியசீலன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மனிதவள முகாமைத்துவத் துறை பேராசிரியர் திருமதி ம.அ.சாந்தகுமாரி, சிறப்பு விருந்தினராக காணி உரித்து நிர்ணயத் திணைக்களத்தின் மாவட்ட உதவி ஆணையாளர் திருமதி மாதுகி சஜீ ஆகியோர் கலந்துகொண்டனர்.

இதன்போது வடமராட்சி வடக்குப் பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட தெரிவு செய்யப்பட்ட பெண் சாதனையாளர்கள் ஆறு பேர் விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டிருந்தனர்.

அந்தவகையில் விளையாட்டுத்துறை சார்பில் பளுதூக்குதல் வீராங்கனை சாணுஜா கோபாலகிருஸ்ணன், பாரம்பரியக் கலைப்பிரிவில் உடுக்குக் கலைஞரான திருமதி ஆனந்தி கணேசன், தற்பாதுகாப்புக் கலைப்பிரிவில் கராத்தே வீராங்கனை திருமதி மாலதி முரளி, மாற்றுத்திறனாளிப் பிரிவில் சுயதொழில் முயற்சியாளர் திருமதி ராஜேஸ்வரி ஞானக்குமரன், யோகாக் கலைப்பிரிவில் திருமதி பத்மலோசனா அதிரூபசிங்கம், பெண் தொழில் முயற்சியாளர் திருமதி மோனறஞ்சன் தர்சினி ஆகியோரே கௌரவிக்கப்பட்டனர். (ச-41-100)



# செயற்பட்டு மகிழ்வோம் விளையாட்டுவிழா

யாழ்ப்பாணம், மார்ச் 17
மந்துவில் வள்ளுவன் முன்பள்ளி சிறார்களின் செயற்பட்டு மகிழ்வோம் விளையாட்டுவிழா நேற்றுமுன்தினம் சனிக்கிழமை மந்துவில் ஸ்ரீபாரதி வித்தியாலய மைதானத்தில் நடைபெற்றது. முன்பள்ளி முகாமைத்துவக் குழுத் தலைவர் சி. இராசகுலசிங்கம் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் முதன்மை விருந்தினராக பேராதனைப் பல்கலைக்கழக ஓய்வுநிலை விரிவுரையாளர் கலாநிதி செ. சிவராசசிங்கம், சிறப்பு விருந்தினராக மந்துவில் ஸ்ரீபாரதி வித்தியாலய பிரதி அதிபர் திருமதி நா.ஆறுமுகம் ஆகியோர் கலந்து கொண்டனர். (ச-9)



# கால்கோள் விழா

யாழ். கொக்குவில் இந்து முன்பள்ளி யின் புதிய மாணவர்களை வரவேற்கும் நிகழ்வு கொக்குவில் மத்திய சனசமூக நிலையத்தின் தலைவர் ச.பிரதாபன் தலைமையில் கல்லூரியின் பஞ்சலிங்கம் அரங்கில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்றது. நிகழ்வில் யாழ். வலயக்கல்வி அலுவலகத்தின் முன்பள்ளி உதவிக் கல்விப் பணிப்பாளர் த. சிவகுமார் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார். (ச-25,20)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பணமோசடியைக்...

முன்னாள் நிர்வாகச் செயலாளரு மான கோர்டன் ஹூக் இலங்கை மத்திய வங்கியால் ஆலோசகராக நியமிக்கப்பட்டுள்ளார்.

சர்வதேச நாணய நிதியத்தால் பரிந்துரைக்கப்பட்டபடி இந்த ஆலோசகர் நியமனம் வழங்கப்பட்டுள்ளது. ஹூக், 2025 மார்ச் மாதம் 25ஆம் திகதி முதல் உரிமம் பெற்ற வங்கிகள் உட்பட, இடைவெளிகளைக் கண்டறிந்து 2026ஆம் ஆண்டு பரஸ்பர மதிப்பீட்டுக்குத் தயாராவதற்காக ஒரு மதிப்பீட்டு அறிக்கையை வழங்குவார் என்று மத்திய வங்கியின் ஆளுநர் நந்தலால் வீரசிங்க தெரிவித்துள்ளார். (அ-எ-இ)

## கடன்...

டுள்ளது என்று இலங்கைக்கான சீனத் தூதுவர் கீ சென்ஹொங் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் உள்ள சீனத் தூதரகத்தில் தூதுவர் கீ சென்ஹொங்கிற்கும், ஊடகப் பிரதிநிதிகளுக்கும் இடையில் சீன அரசாங்கத்தின் செயற்பாட்டு அறிக்கை மற்றும் வெளிவிவகார கொள்கை மற்றும் உறவுகள் தொடர்பான கலந்துரையாடல் நடைபெற்றது. அதன் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:- இலங்கையுடன் சீனாவே முதன்முதலாக கடன்மறுசீரமைப்பு ஒப்பந்தத்தைக் கைச்சாத்திட்டது. வெளிநாட்டு கடன் மறுசீரமைப்புக்கு முதலில் இணங்கிய நாடாகவும் சீனா இருக்கின்றது. ஆனால் இந்தியா உள்ளிட்ட ஏனைய நாடுகள் இன்னமும் வெளிநாட்டு கடன் மறுசீரமைப்புக்கான ஒப்பந்தத்தில் கைச்சாத்திடவில்லை. இலங்கையுடனான கடன்மறுசீரமைப்பை சீனா மேற்கொண்டதால் பெருந்தொகையான நிதியை இழந்துள்ளது. இலங்கையுடனான சீனாவின் கடன் மறுசீரமைப்பு இணக்கத்தால் 7 பில்லியன் அமெரிக்க டொலரைச் சீனாவின் எக்ஸிம் வங்கி இழந்துள்ளது. இந்த இழப்புத் தொடர்பில் யாரும் பேசுவதில்லை. சீன எக்ஸிம் வங்கி சீனாவின் முக்கியமான ஏற்றுமதி, இறக்குமதி விடயங்களில் பங்காளராக இருக்கின்றது.

இலங்கையின் கடன்மறுசீரமைப்புக்காக சீனா பெருந் தியாகத்தைச் செய்துள்ளது. அதிகளவான பங்களிப்பையும் வழங்கியுள்ளது. ஆனால் அந்த விடயங்களை சீனா பிரசாரம் செய்வதில்லை - என்றார். (அ-எ-இ)

## பட்டலந்த...

பட்டலந்த ஆணைக்குழுவின் அறிக்கை தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள சிறப்பு அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:- 1987ஆம் ஆண்டு இலங்கை இந்திய ஒப்பந்தம் கைச்சாத்திட்ட பின்னர், மக்கள் விடுதலை முன்னணி, நாடு முழுவதும் வன்முறைகளில் ஈடுபட்டிருந்தது. அந்த நேரத்தில் நாட்டில் உள்ள கேந்திர நிலையங்களைப் பாதுகாப்பதற்கான அதிகாரம் அப்போதைய ஜனாதிபதியான ஜே.ஆர். ஜயவர்த்தனவால் அமைச்சரவை அமைச்சர்களுக்கு வழங்கப்பட்டது. பியகம பகுதியில் எண்ணெய் சுத்திகரிப்பு நிலையம், டீசல் மின் உற்பத்தி நிலையம், மஹாவெலியில் இருந்து கொழும்புக்கு மின்சாரத்தை விநியோகித்த மத்திய நிலையங்கள், வர்த்தக வலயங்கள், பொருளாதார மத்திய நிலையங்கள் ஆகியவற்றைப் பாதுகாப்பதற்காக இராணுவம் அழைக்கப்பட்டது.

பாதுகாப்புத் தரப்புகள் தங்கியிருப்பதற்காக இலங்கை உரத் தயாரிப்பு கூட்டுத்தாபனத்துக்கு சொந்தமான அந்த காலத்தில் கைவிடப்பட்ட கட்டடம் மற்றும் வீடுகள் சிலவற்றை வழங்குவதற்குத் தீர்மானிக்கப்பட்டது. அந்த வன்முறை காலத்தில் சப்புகஸ்கந்த பொலிஸ் நிலையத்தின் மீது தாக்குதல் நடத்தி, அந்த நிலையத்தின் பொறுப்பதிகாரியை படுகொலை செய்தனர்.

அப்போது பாதுகாப்பு பிரதி அமைச்சராக இருந்த ரஞ்சன் விஜேரத்ன என்னுடன் பேசினார். இராணுவம் மற்றும் பொலிஸ் அதிகாரிகளின் பாதுகாப்புக்காக, வீட்டுத் தொகுதியில் வெற்றிடமாக இருக்கும் வீடுகளை வழங்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார். அதன் அடிப்படையிலேயே அந்த வீடுகளில் ஒன்றை களனி பொலிஸ் அதிகாரி நளின் தெல்கொடவுக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது.

பட்டலந்த பிரதேசத்தில் வதைமுகாம் இருந்தது என்று கூறி, 1994ஆம் ஆண்டு சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்க ஆணைக்குழுவை நியமித்தார். அந்த ஆணைக்குழு முன்னிலையில் பல நபர்கள் அழைக்கப்பட்டிருந்தனர். என்னை சாட்சியாளராக மட்டுமே அழைத்தனர். அப்போது நான், நாட்டின் எதிர்க்கட்சித் தலைவராகப் பதவி வகித்தேன். பட்டலந்த ஆணைக்குழு, அரசியல் சேறு பூசும் நடவடிக்கைக்காக மட்டுமே நியமிக்கப்பட்டது. எனினும், அந்த முயற்சி கைகூடவில்லை.

அறிக்கையின் தீர்மானத்தின் பிரகாரம், அமைச்சர் என்ற வகையில், பொலிஸ் கண்காணிப்பாளர் ஊடாக பொலிஸ் அதிகாரிகளுக்கு வீடுகள் வழங்கப்பட்டமை பிழையானது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. வீடுகளை பொலிஸ் மா அதிபரிடம் ஒப்படைத்து, அவர் மூலம் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் ஒப்படைப்பதே சரியான முறையாக இருக்க வேண்டும். இந்தச் செயலுக்கு நளின் தெல்கொடவும் நானும் மறைமுகமாகப் பொறுப்பு என்று ஆணைக்குழுவின் அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. ஆணைக்குழுவின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள வேறெந்த காரணங்களும் எனக்குப் பொருந்தாது. பெரும்பாலானவர்கள் இந்த அறிக்கையை ஏற்றுக் கொள்ளவில்லை. அதனாலேயே நாடாளுமன்றத்தில் அதைப் பற்றி விவாதிக்க எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. இதுவரை ஆட்சிக்கு வந்த எந்த அரசியல் கட்சியும் இந்த அறிக்கையின் மூலம் குறுகிய அரசியல் ஆதாயங்களைப் பெற முயன்றதில்லை என்பதையும் கவனத்திற் கொள்ள வேண்டும். இருபத்தைந்து ஆண்டுகளுக்குப் பின்னர் நாடாளுமன்றக் கூட்டத்தொடர் அறிக்கையை விவாதிக்கும் பாரம்பரியம் இந்த நாட்டிலோ அல்லது பிற நாடாளுமன்றங்களிலோ இல்லை - என்றார். (அ-எ-இ)

## தேசபந்து...

வெலிகம பெலேனவில் உள்ள விருந்தகம் ஒன்றுக்கு அருகில் நடத்தப்பட்ட துப்பாக்கிச்சூட்டுச் சம்பவம் தொடர்பாக முன்னாள் பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் தவிர்ந்த ஏனைய 6 சந்தேகநபர்களையும் கைதுசெய்யவேண்டாம் என்று சட்டமா அதிபர் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்துக்கு அறிவுறுத்தியுள்ளார்.

மேன்முறையீட்டு நீதிமன்றில் எட்டப்பட்ட இணக்கப்பாட்டுக்கு அமைய முற்கட்ட விசாரணைகள் நிறைவடையும்வரை சந்தேகநபர்களைக் கைது செய்யவேண்டாம் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது.

குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தில் முன்னிலைப்படுத்தப்பட்ட பின்னர் அவர்களிடம் வாக்குமூலங்களைப் பதிவு செய்ய வேண்டும் என்றும் சட்டமா அதிபர் தெரிவித்துள்ளார்.

முன்னாள் பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் தவிர்ந்த ஏனைய 6 சந்தேகநபர்களின் நீதிப் பேராணை மனு எதிர்வரும் 21ஆம் திகதி மேன்முறையீட்டு நீதிமன்றில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளது என்று கொழும்பு குற்றப்புலனாய்வுப் பிரிவின் பொறுப்பதிகாரி தெரிவித்துள்ளார்.

2023ஆம் ஆண்டு வெலிகம, பெலெனப் பிரதேசத்தில் நடந்த துப்பாக்கிச்சூட்டுச் சம்பவம் தொடர்பாக முன்னாள் பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் உட்பட 8 பேரைக் கைதுசெய்து நீதிமன்றில் முற்படுத்து மாறு மாத்தறை நீதவான் நீதிமன்றம் அண்மையில் பிடியாணை பிறப்பித்திருந்தது.

அதையடுத்துத் தலைமறைவாகியுள்ள முன்னாள் பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் தனது சட்டத்தரணிகள் ஊடாக, தனக்கு எதிராகப் பிறப்பிக்கப்பட்டுள்ள பிடியாணைக்கு இடைக்காலத் தடை விதிக்கக்கோரி மேன்முறையீட்டு நீதிமன்றில் நீதிப்பேராணை மனுவொன்றைத் தாக்கல் செய்திருந்தார்.

இதனிடையே குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தினர் முன்னாள் பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோனின் மனைவியிடம் வாக்குமூலம் பதிவுசெய்திருந்தனர். இந்த வாக்குமூலம் ஹோகந்தரவில் உள்ள அவரது வீட்டில் வைத்துப் பெறப்பட்டது என்றும், தேசபந்து தென்னக்கோன் தொடர்பில் இதுவரை எந்தவிதமான தகவலும் இல்லை என்றும் குற்றப்புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (அ-எ-இ)

## யாழ்...

உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்காக யாழ்ப்பாண மாவட்டத்தில் 17 உள்ளூராட்சி சபைகளுக்கு 123 கட்டுப்பணம் இதுவரை அரசியல் கட்சிகள் மற்றும் சுயேச்சை குழுக்களால் செலுத்தப்பட்டுள்ளன.

வேட்புமனுத் தாக்கல் நாளை ஆரம்பமாகவுள்ள நிலையில் இதுவரை யாழ்ப்பாணம் மாநகரசபைக்கு 7 கட்டுப்பணமும், வல்வெட்டித்துறை நகரசபைக்கு 8 கட்டுப்பணமும், பருத்தித்துறை நகரசபைக்கு 8 கட்டுப்பணமும், சாவகச்சேரி நகரசபைக்கு 8 கட்டுப்பணமும், காரைநகர் பிரதேச சபைக்கு 8 கட்டுப்பணமும், ஊர்காவற்துறை பிரதேசசபைக்கு 5 கட்டுப்பணமும், நெடுந்தீவு பிரதேசசபைக்கு 5 கட்டுப்பணமும், வேலணை பிரதேச சபைக்கு 7 கட்டுப்பணமும், வலிகாமம் மேற்கு பிரதேசசபைக்கு 7 கட்டுப்பணமும் செலுத்தப்பட்டுள்ளன.

வலிகாமம் வடக்கு பிரதேச சபைக்கு 7 கட்டுப்பணமும், வலிகாமம் தென்மேற்குப் பிரதேசசபைக்கு 7 கட்டுப்பணமும், வலிகாமம் தெற்கு பிரதேச சபைக்கு 8 கட்டுப்பணமும், வலிகாமம் கிழக்கு பிரதேசசபைக்கு 8 கட்டுப்பணமும், வடமராட்சி தென்மேற்கு பிரதேச சபைக்கு 8 கட்டுப்பணமும், பருத்தித்துறை பிரதேசசபைக்கு 9 கட்டுப்பணமும், சாவகச்சேரி பிரதேச சபைக்கு 7 கட்டுப்பணமும், நல்லூர் பிரதேசசபைக்கு 6 கட்டுப்பணமும் என மொத்தமாக 123 கட்டுப்பணம் அரசியல் கட்சிகள் மற்றும் சுயேச்சைக் குழுக்களால் செலுத்தப்பட்டுள்ளன.

அகில இலங்கை தமிழ் காங்கிரஸ், இலங்கை தமிழ் அரசுக் கட்சி, ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணி, தேசிய மக்கள் சக்தி, ஐக்கிய தேசியக் கட்சி ஆகிய ஐந்து அரசியல் கட்சிகள் யாழ்ப்பாண மாவட்டத்தில் அனைத்து உள்ளூராட்சி சபைகளிலும் போட்டியிடக் கட்டுப்பணத்தைச் செலுத்தின.

தமிழ் மக்கள் கூட்டணி இதுவரை 14 உள்ளூராட்சி சபைகளில் போட்டியிடக் கட்டுப்பணத்தைச் செலுத்தியுள்ளது. வல்வெட்டித்துறை பிரதேசசபை, நெடுந்தீவுப் பிரதேசசபை, ஊர்காவற்துறைப் பிரதேசசபை ஆகிய உள்ளூராட்சி சபைகளில் போட்டியிட கட்டுப்பணம் செலுத்தவில்லை.

ஐக்கிய மக்கள் சக்தி 8 உள்ளூராட்சி சபைகளிலும், சிறிலங்கா பொதுஜன பெரமுன 4 உள்ளூராட்சி சபைகளிலும் போட்டியிடக் கட்டுப்பணத்தை செலுத்தியுள்ளன. சாவகச்சேரி பிரதேச சபையில் போட்டியிட தமிழர் சமூக ஜனநாயகக் கட்சியும், காரைநகர் பிரதேசசபையில் போட்டியிட சோசலிச சமத்துவக் கட்சியும் கட்டுப்பணத்தைச் செலுத்தியுள்ளன. (அ-எ-26)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## அமெரிக்க...

வுள்ளது என்று வெளியுறவுத்துறை அமைச்சர் விஜித ஹேரத் நாடாளு மன்றத்தில் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தி னம் உரையாற்றியபோது வெளிவிவ கார அமைச்சர் இந்தத் தகவலைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:- இலங்கை எவ்வாறு இந்த வரிகளைத் தவிர்க்கலாம் என்பது தொடர்பான விவாதங்கள் நடத்தப்படும். நாட்டின் பொருளாதார நிலைமை ஸ்திரமின்றி இருப்பதால் ஏற்றுமதிகள் மீதான இத் தகைய வரிகளை இலங்கையால் தாங்கமுடியாது.

நிதி அமைச்சு, வெளியுறவுத்துறை அமைச்சு மற்றும் வர்த்தக சமூகத் தின் பிரநிதிகளுடன் அடுத்தமாதம் அமெரிக்காவில் உயர்மட்ட இலங்கை வர்த் தக சம்மேளனம் நடைபெறும். இந் தப் பயணத்தில் அமெரிக்க வர்த்த அலுவலக உறுப் பினர்களுடன் கலந்துரையாடல் கள் மேற்கொள் ளப்படும். வரிப்பி ரச்சினை தொடர் பாகக் கலந்துரை யாடவும், நிவார ணத்தைப் பெற் றுக்கொள்ளவும் முடியும் என்று இலங்கை நம்பு கின்றது.

சர்வதேச நாணய நிதியத் திட்டத்துக்குள் செயற்படும் இலங்கைக்கு அதிகரித்த கட்டணங்க ளைத் தாங்க முடியாது என்பதால் வரிச்சலுகை கிடைக்கும் என்று நம்பு கின்றோம் - என்றார். (அ-எ-இ)


### தென்னந் தோட்டக்காணி விற்பனைக்கு

பச்சிலைப்பள்ளி பளைப் பிரதேசத்தில் 40 ஏக்கர் வளமான தென்னைக்கு உகந்த காணி விற்பனைக்கு உண்டு. பகுதியாகவும் பெற்றுக் கொள்ளலாம். விலை பேசித் தீர்மானிக்கப்படும்.

தொடர்பு:- Whatsapp:- 0044 740 537 3526

(CS/57653) J-1

### பண வசூலிப்பாளர் தேவை



யாழ். நகரில் இயங்கும் எமது நிறுவனத்திற்கு

**பண வசூலிப்பாளர் தேவை.**

தகுதியானவர்கள் கீழ்வரும் முகவரிக்கு 17.03.2025 திங்கட்கிழமை மு.ப 9.00 - பி.ப 02.00 வரை நேரில் சமுகம் தரவும்.

**உதயன்**

**இல.361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**


## திருட்டுகள்...

டுள்ளனர். சந்தேகநபர்களிடமிருந்து 6 மோட்டார் சைக்கிள்களும், 15 பவு ணுக்கு அதிகமான தங்கநகைகளும் மீட்கப்பட்டுள்ளன என்றும் பொலி ஸார் தெரிவித்துள்ளனர்.

கிளிநொச்சி, மாங்குளம், முறிகண்டி, வட்டக்கச்சி ஆகிய இடங்களில் நடந்த பல்வேறு திருட்டுச் சம்பவங்கள் தொடர்பாகவே சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். சந்தேகநபர் கள் நேற்று நீதிமன்றில் முற்படுத்தப் பட்டு, பொலிஸ் தடுப்புக் காவலில் வைத்து விசாரணைக்குட்படுத்தப்படு கின்றனர் என்று பொலிஸார் தெரிவித் தனர். (அ-எ-113)

## யாழ்...

டிருந்தார். பயணம் தடைப்பட்ட நிலை யில், சுகவீனமுற்றிருந்த இந்த இளை ஞர் இலங்கைக்கு உறவினர்களால் கடந்த 11ஆம் திகதி அழைத்து வரப்பட் டிருந்தார்.

இவர் பிளாஸ்மோடியம் பல்சிபோறம் என்ற மலேரியாக் கிருமித் தொற்றுக் குள்ளாகியுள்ளார் என்று உறுதிப்படுத் தப்பட்டுள்ளது.

இது குறித்து யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் பிரதிப் பணிப்பா ளர் மருத்துவர் சி. யமுனாநந்தா கருத்து வெளியிடுகையில்,

இலங்கையில் மலேரியாத் தொற்று முற்றாக ஒழிக்கப்பட்டுள்ளது. வெளி நாடு சென்று திரும்புவர்கள் ஊடாக மலேரியாத் தொற்றுப் பரவும் அபா யம் இருப்பதால், அவர்கள் விமான நிலையத்தில் உள்ள மருத்துவ அதி காரியையோ, அருகில் உள்ள சுகாதார மருத்துவஅதிகாரிபணிமனையையோ அல்லது மருத்துவமனையையோ அணுகி உரிய மருந்துவ ஆலோச னையும் தடுப்பு மருந்து பெறுவதும் அவசியம் - என்றார். (அ-எ-இ)

## நிலத்தடிக்...

கூட்டமைப்பின் ஊடகப் பேச்சாளர் ஆனந்த பாலித்த தெரிவித்துள்ளார்.

முத்துராஜவெல முனையத்தில் தரை யிறக்கப்பட்ட 14 ஆயிரம் மெற்றிக் தொன் 92 ரக பெற்றோல் இந்தக் குழாய் ஊடாக விநியோகிக்கப்பட்டது.

இந்த எரிபொருள் விநியோகம் நேற் றுமுன்தினம் மாலை 4 மணிக்கு ஆரம்பமாகியிருந்த நிலையில், இரவு 7 மணியளவிலேயே கசிவு கண்டறி யப்பட்டது . இரவு 7.35 அளவில் எரி பொருள் கசிவைத் தடுக்க நடவ டிக்கை எடுக்கப்பட்டது என்றும் கூறப் படுகின்றது. (அ-எ-இ)

# மரண அறிவித்தல்

பிறப்பு 13.10.1942

இறப்பு 14.03.2025



## சிவபாதசுந்தரம் சுகிர்தரெட்ணம் (சுகிர்தம்)

**(சரவணை மேற்கு நாவலடி ஞானவைரவர் பெருமான் ஆலயத்தின் தர்மகத்தா)**

சரவண மேற்கை பிறப்பிடமாகவும் 3/5 பிரபங்குளம் லேன் வண்ணார் பண்ணையை வசிப்பிடமாகவும் கொண்ட சிவபாதசுந்தரம் சுகிர்தரெட்ணம் (சுகிர்தம்) (14.03.2025) வெள்ளிக்கிழமை இறைபாதம் அடைந்துவிட்டார். அன்னார் காலஞ்சென்றவர்களான குணரெட்னம் கமலாம்பிகை தம்பதியின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான செல்லையா இலட்சுமிப்பிள்ளை தம்பமதியின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற சிவபாதசுந்தரத்தின் அன்பு மனைவியும் கருணானந்தன், சிவானந்தன், கௌரி ஆகியோரின் அன்புத் தாயரும், சுயந்தினி, புஸ்பகாந்தராசா ஆகியோரின் மாமியாரும், ஜதுஷன் பிரதிகா, பிரமியா, செந்தூரன், பிரஷாந்-மத்தீல் ஆகியோரின் அன்பு பேர்த்தியும், நேஹாவின் அன்பு பூட்டியம், காலஞ்சென்றவர்களான மகாதேவன்-இலட்சுமி, சண்முகலிங்கம்-வாலம்பிகை ஆகியோரின் அன்புச் சகோதரயும் காலஞ்சென்ற வர்களான மாணிக்கத்தியாகராஜா-லோகேஸ்வரி, அச்சலிங்கம்- கமலாதேவி, மௌனசுந்தரம்-மகேஸ்வரி, ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் நாளை (18.03.2025) செவ்வாய்க்கிழமை அன்று காலை 8.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சரவணை புன்னாங்கண்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**3/5 பிரம்பன் குளம் லேன் வண்ணார்பண்ணை யாழ்ப்பாணம்.**

| | |
|---|---|
| மகன் | : 001 514 298 9297 |
| மகள் | : 003 366 176 6034 |
| மகள் | : 076 932 1542 |
| பெறாமகன் | : 077 177 7738 |

**தகவல்: குடும்பத்தினர்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காணி விற்பனைக்கு

## யாழ்ப்பாணம் உரும்பிராய் பகுதியில் 36 பரப்பு காணி விற்பனைக்குண்டு

## நிலப்பரப்பு

- பலாலி வீதியில் இருந்து 150 மீற்றர் தூரம்
- 20 அடி பாதையுடன் 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் உள்ளது
- உரும்பிராய் பெற்றோல் செற் முன் வீதியில் உள்ளது
- கட்டுக் கிணற்றுடன் சிறிய வீடும் உள்ளது
- பயன் தரும் தென்னைகள் உள்ளன
- நல்ல சுற்று சூழல் குடியிருப்புக்கள் சூழவுள்ள பகுதி
- நல்ல தண்ணீர் ஊற்று சூழல்
- ஓர பரப்பின் விலை 64 லட்சம்
- தரகர் தேவையில்லை
- பார்வையிடும் நேரம்: காலை 6.00 மணி தொடக்கம்
  மாலை 6.00 மணி வரை








தொடர்புகளுக்கு: ஜெயம்

**077 814 7389, 077 986 5457**

செய்தி : 021 493 0000 - விளம்பரம் : 021-493 1111 விளம்பரம்:advt@uthayan.com
இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் ... உள்ள அவர்களது பணிமனையில் 17.03.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org